Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கலியாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 06 சனிக்கிழமை (20.06.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 184

## மணல் அகழ்வுக்கான அனுமதியை எதிர்த்து வடமராட்சியில் பொதுமக்கள் போராட்டம்

(கரணவாய்)

யாழ.வடமராட்சிகிழக்கு மணற்காடு பகுதியில் தனியாருக்கு மணல் அகழ்வு அனுமதி வழங்கப்பட்டதைக் கண்டித்து நேற்று காலை மீண்டும் பொதுமக்கள் கூடி எதிர்ப்பினை வெளியிட்டனர்.

பிரதேச மக்களுக்கு மணல் அகழ்வுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடை மீறி தனியாருக்கு மணல் அகழ்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதை எதிர்த்து கடந்த சில நாட்களுக்கு முன்னர் பிரதேசவாசிகள் எதிர்ப்பு 15



### கொரோனாவால் வெளிநாடுகளில் இலங்கையர்கள் 21 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள இலங்கைப் பணியாளர்களில் இதுவரை 21 பேர் கொரோனா தொற் 15

### யாழைச் சேர்ந்த புலனாய்வாளர் விபரீத முடிவு



15

## போர் முடிந்த பின்னரும்
# வடக்கு கிழக்கு இராணுவ மயம்
## ஐ.நா நிபுணர் குற்றச்சாட்டு



(ஜெனிவா)

இலங்கையில் போர் முடிந்து பத்து ஆண்டுகளுக்கு மேலாகியும் வடக்கு, கிழக்கு இராணுவ மயப்படுத்தப்பட்ட சூழலிலேயே இருப்பதாக அமைதியாக ஒன்றுகூடும், சுதந்திரத்துக்கான உரிமைகள் குறித்த ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் கிளெமென்ட் என்யலெட் சோசி வூல் குற்றம் சாட்டியுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

### ஹெரோயினுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கிழக்குப் பகுதியில் 2 கிராம் ஹெரோயினை விற்பனைக்காக எடுத்துச் சென்ற குற்றச்சாட்டில் நபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.பிராந்திய போதைத் தடுப்புப் 15

## வாள்வெட்டுக்கு சென்ற குழு இராணுவத்தால் மடக்கிப் பிடிப்பு
### யாழ்.நாயன்மார்கட்டில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நாயன்மார்கட்டுப் பகுதியால் வாள்வெட்டு மோதலுக்கு சென்றவர்களை இராணுவம் மடக்கிப் பிடித்துள்ளது.

நேற்று மாலை நடந்த இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவ 15

## கொரோனா வைத்தியசாலைக்கு எதிராக அக்கராயன் மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம்

(கிளிநொச்சி)

அக்கராயன்குளம் பிரதேச வைத்தியசாலையை கொரோனா வைத்தியசாலையாக மாற்ற வேண்டாம் எனவும் பொருத்தமான வைத்தியசாலையினை தெரிவு செய்யுமாறும் கோரி நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அக்கராயன்குளம 15



## கொரோனாவின் 2ம் சுற்று இலங்கையில் மீண்டும் தலைதூக்கலாம்
### சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றாவிட்டால், எந்த நேரத்திலும் நாட்டில் கொரோனாவின் இரண்டாவது சுற்று ஆபத்து உருவாகலா 15

### 5 இலட்சத்து 71 ஆயிரம் பேர்
## யாழ்.தேர்தல் மாவட்டத்தில் வாக்களிப்பதற்கு தகுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் இம்முறை 5 இலட்சத்து 71 ஆயிரத்து 15

## வவுனியாவில் 10 பேருக்கு கொரோனா வைரஸ்

(வவுனியா)

வவுனியா வேலங்குளம் தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த 10 பேருக்கு கொரோனாவைரஸ்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பக்கம் 6ஐ பார்க்க

### யாழ்.கற்கடதீவில்
## 58 கிலோ கஞ்சா மீட்பு

(குப்பிளான்)

யாழ். கற்கடதீவில் கடற்படையினரால் நேற்று வெள்ளிக்கிழமை 15

## படையினர் சித்திரவதைகளுக்கு பயன்படுத்திய இடங்கள்
### வரைபடத்தை வெளியிட்டது சர்வதேச அமைப்புக்கள்




படையினர் சித்திரவதைகளுக்குப் பயன்படுத்திய இடங்களை வரைபடம் மூலம் சர்வதேச அமைப்புக்கள் வெளியிட்டன. 03

# யாழில் நேற்று 56 பேருக்கு கொரோனா பரிசோதனை

## எவருக்கும் தொற்றில்லை

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை(19) 56 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், எனினும், அவர்களில் எவருக்கும் கொரோனாத் தொற்று இல்லையென உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

காங்கேசன்துறை கடற்படை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 26 பேர், மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட 14 பேர், கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 5 பேர், மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 5 பேர், பம்பைமடு தனிமைப்படுத்தல் மையத்தில் அனுமதிக்கப்பட்ட 5 பேர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் ஆகியோரே இவ்வாறு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3-18)


## 31ம் நாள் நினைவஞ்சலி



கடந்த 21.05.2020 வியாழக்கிழமை
அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவி
அமரர்

**பாஸ்கரன் நல்லம்மா**

அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்கான
திருப்பலி 20.06.2020 சனிக்கிழமை இன்று
காலை 10.00 மணிக்கு புன்னாலைக்கட்டுவன்
புனித இராயப்பர் ஆலயத்தில் நடைபெற்று
அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில்
நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும்
கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

சேச்சடி,
குப்பிழான் தெற்கு.
புன்னாலைக்கட்டுவன்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(C 9735)


# இந்திய உயர்ஸ்தானிகருடன் பிரதமர் மகிந்த சந்திப்பு



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லேவிற்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்குமிடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பு பிரதமர் அலுவலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் தொடர்பாக உரையாடப்பட்டதாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)


## ஆறாம் ஆண்டு நினைவினில்...



அமரர்
**சுந்தரம் குணராஜா**

திதி - ஆனி மாத திரயோதசி
மலர்வு 01.01.1940
உதிர்வு 26.06.2014

ஐயா! ஆண்டுகள் ஆறாகியும்
ஆறாத புண்ணாய் வலிக்கிறது மனம்
உணர்வற்ற உடலாய் இருக்கும் வரை
போற்றி ஏற்றிப் பணிவோம்.

தாளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்
077 620 3797

(3058)



## கண்ணீர் அஞ்சலி



**மேரி யோசப் பிலோமினா**

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப்பிரிவு மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் தையல் போதனாசிரியையாக கடமையாற்றும் எமது நலன்புரிச்சங்க அங்கத்தவர் திருமதி. பீப்சன்சீலி மொறாயஸ் அவர்களின் தாயார்

மேரி யோசப் பிலோமினா
அவர்கள் 14.05.2020 அன்று
காலமாகியமையால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு
அவரது ஆன்ம இளைப்பாற்றிற்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(3054)

யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்
நலன்புரிச் சங்கம், யாழ்ப்பாணம்.



## பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்தில் இணைந்து வாழ்க்கையை புதிதாக எழுதுவதற்கு இதோ உங்களுக்கு அரியதோர் சந்தர்ப்பம். சர்வதேச நிறுவனமொன்றில் அங்கத்தவராகும் வாய்ப்பு உங்களுக்கு கிடைத்துள்ளது.



**வயதெல்லை - (20-60)**
**கல்வித் தகைமை- G.C.E(A/L)**

வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் இருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்

Note: பகுதி நேர வேலையில் ஆர்வம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்

AIA வெல்த் பிளேனராக திகழ்வதனால் கிட்டும் அளப்பரிய வரப்பிரசாதங்கள் என்ன?

- உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் மேலதிக வருவாய்
- வீட்டில் உங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றும் அதேவேளை நீங்கள் விரும்பிய நேரத்தில் செயற்படும் வசதி
- AIA யின் நிபுணத்துவமும்,தொழிநுட்பமும் மிகச் சிறந்த ஆற்றலை வெளிப்படுத்த உதவும்
- ஏனைய வரப்பிரசாதங்களும் கொடுப்பனவுகளும்
- சர்வதேச நிறுவனத்துடன் இணைந்து செயற்படும் வாய்ப்பு.

(3061)

62/6, Stanley Road, Jaffna | T.P:-077 712 1868



## எம் இதயத்தில் துயில் கொள்ளும் எமது அன்புத் தாயாரின் ஓராண்டு நிறைவு நாள்



அமரர்
**நடராஜலிங்கம் கமலாதேவி**

( ஓய்வு பெற்ற இ.மி.ச உத்தியோகத்தரும் " இந்திரதீபம் " உரிமையாளருமான நடராஜலிங்கம் அவர்களின் பாசமிகு துணைவியார் )

உதயத்தில் 13.01.1947
இதயத்தில் 03.06.2019

அம்மா தாங்கிய சுமைகள் போதுமென்று
எம்மைத் தனியாகத் தவிக்கவிட்டு சென்றதேனோ?
பத்தொன்பது வருடங்களாக உன் கணவனை
இழந்தும் எமக்குக் காவல் தெய்வமாக நீ இருந்தாய் அம்மா
இன்று உன் கணவனே கண்கண்ட தெய்வம் என்று
அவர் பாதம் நாடி தொலைதூரம் சென்றதேனோ?
விதி ஒன்று வந்ததோ அம்மா எம்மை விட்டுப் பிரிய
வழி பார்த்துத் தேடுகின்றோம் மீண்டும்
வாசல் வந்து சேருமம்மா
கலங்கியே தவிக்கின்றோம் காலம் எல்லாம் உன் நினைவில்

(3064)

நீலர்வளவு, தும்பளை,
பருத்தித்துறை.

உன் பிரிவைத் தாங்கி நிற்கும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

என்றும் அன்புடன்
தி. பிருந்தயன், தி. கபிசாயினி , தி. டினோத்யன்

# பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே தற்போதுள்ள பாரிய சவால்

(கொழும்பு)

## ஜனாதிபதி தெரிவிப்பு

**நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதே தம் முன்னுள்ள பாரிய சவாலாகுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**



கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலுக்குப் பின்னர் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர்களுடன் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலினால் ஏற்படுத்தப்பட்ட சவால்களை எதிர்கொள்வதற்கு பொது சுகாதார சேவைகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரின் உதவியுடன் பொது சுகாதார பரிசோதகர்கள் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமல்லாது அவர்களுடன் தொடர்பைப் பேணியவர்களும் அடையாளம் கண்டு தனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்த செயற்றிட்டம்தான் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றை வெற்றிகரமாக கட்டுப்படுத்துவதற்கு உதவியதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-8)

# படையினர் சித்திரவதைகளுக்கு பயன்படுத்திய இடங்கள்



## முதலாவது வரைபடத்தை வெளியிட்ட சர்வதேச அமைப்புகள்

(ஜெனிவா)

இலங்கையின் முதலாவது சித்திரவதை வரைபடத்தை சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டமும் இலங்கையில் ஜனநாயகத்திற்கான பத்திரிகையாளர்கள் அமைப்பும் இணைந்து வெளியிட்டுள்ளன.

எதிர்வரும் ஜூன் 26 ஆம் திகதி சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக இரு அமைப்புகளும் இலங்கையின் சித்திரவதை வரைபடத்தை வெளியிட்டுள்ளன.

இலங்கையில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்களை சித்திரவதை செய்வதற்காக கடந்த மூன்று தசாப்த காலமாக இராணுவத்தினரும் கடற்படையினரும் பொலிஸாரும் படையினருடன் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுக்களும் பயன்படுத்தும் 219 இடங்கள் அடங்கிய வரைபடத்தை குறித்த அமைப்புகள் வெளியிட்டுள்ளன.

எனினும் இலங்கையில் இடம்பெற்ற சித்திரவதைகளின் முழுமையான அளவினை இந்த வரைபடம் வெளிப்படுத்தவில்லை எனவும் குறித்த இரு அமைப்புக்களும் சுட்டிக்காட்டியுள்ளன.

மேலும் எண்பதுகளின் இறுதியில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீடமும் லேக்ஹவுசின் கட்டடமொன்றும் சித்திரவதைக்காக பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் சர்வதேச அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

அத்துடன் கடந்த பல தசாப்தங்களாக இலங்கையின் பல பாடசாலைகளும் கல்லூரிகளும் பயிற்சி நிறுவகங்களும் தொழிற்சாலைகளும் பண்ணைகளும் திரை அரங்குகளும் கோல்வ் திடல்களும் சித்திரவதைக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன எனவும் இந்த அமைப்புகள் மேலும் தெரிவித்துள்ளன. (ஜ-4)

# திரையரங்குகள் திறக்கப்படவுள்ளன

(கொழும்பு)

நாட்டின் அனைத்துத் திரையரங்குகளும் எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் திறக்கப்படவுள்ளதாக கலாசார அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றி திரையரங்குகளை திறப்பதற்கு தீர்மானித்துள்ளதாக கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பந்துல ஹரிஷ்சந்திர தெரிவித்துள்ளார். திரையரங்குகளை திறப்பதற்கு முன்பாக கிருமி ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை திரையரங்குகளுக்கு வருகை தருவோர் பின்பற்றவேண்டிய நடைமுறைகள் தொடர்பில் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக நாடளாவிய ரீதியில் உள்ள திரையரங்குகள் கடந்த மார்ச் மாதம் 14 ஆம் திகதி மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# கொரோனா தொற்றுடைய இந்தியருக்கு இலங்கையில் சிகிச்சையளிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட இந்திய பிரஜை ஒருவர் கட்டாரிலிருந்து நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

கடற்படையைச் சேர்ந்த மேற்படி நபரும் மேலும் 69 பேரும் கடந்த 17 ஆம் திகதி மும்பையில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்திருந்தனர். இவர்களில் 54 பேர் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ள கப்பலில் பணியாற்றுவதற்காக இணைக்கப்பட்டதுடன் ஏனைய 15 பேர் கட்டாருக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

இவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் மேற்படி நபரும் உள்ளடங்குகிறார். இதனையடுத்து அங்கு வைத்து அவர் கொரோனா வைரஸ் தொற்றாளராக இனங்காணப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவர் மீண்டும் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். சர்வதேச விமான பயணச் சட்டத்துக்கு அமைய மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேற்படி நபரை இந்தியாவின் மும்பை நகருக்கு அனுப்பி வைக்க முடியாத நிலையில் அவருக்கு கொழும்பு ஐ.டி.எச். இல் சிகிச்சை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# கொரோனா தொற்று பரவலின் விளைவு சிறார்களின் உடல் எடை அதிகரிப்பு

(கொழும்பு)

கொரோனாத் தொற்று காரணமாக பாடசாலைகள் பூட்டப்பட்டுள்ளதால் குழந்தைகளின் எடை அசாதாரணமாக அதிகரித்துள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.


இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில், இந்நிலைமை நீடிக்குமாயின் சிறுவர்கள் அதிக பருமனாக மாறுவதற்கான ஆபத்து காணப்படுகிறது. காலை வேளையிலிருந்து சிறுவர்கள் தொலைக்காட்சி பார்ப்பதால் ஒரு இடத்தில் அமர்ந்திருப்பதும் எடை அதிகரிப்பிற்கான காரணமாகும்.

சிறுவர்களின் எடை அதிகரிப்பு குறித்து ஏற்கனவே பதிவாகியிருந்த நிலையில் கடந்த 3 மாத காலத்தினுள் சிறுவர்களின் எடை மேலும் அதிகரித்துள்ளது. நாளொன்றுக்கு ஒரு மணித்தியாலமேனும் சிறுவர்கள் ஏதேனும் செயற்பாடுகளில் ஈடுபடல் வேண்டும்.

குறித்த காலப்பகுதியில் போசாக்கு குறைபாடுகளுடனும் சிறுவர்கள் சிகிச்சை பெற வருகை தருகிறார்கள் என சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது. (ஜ-8)

# ஊடகவியலாளர் அடையாள அட்டை விவகாரத்தில் பாதுகாப்பு அமைச்சு, இராணுவத்தினர் தலையீடு

## அஜித் பீ. பெரேரா குற்றச்சாட்டு



(கொழும்பு)

**ஊடகவியலாளர்களின் தேசிய அடையாள அட்டை தொடர்பில் பொதுக்கொள்கை அவசியம். இதுவரைகாலமும் தகவல் திணைக்களத்தினால் வழங்கப்பட்டதைப் போன்று இம்முறையும் தகவல் திணைக்களத்தின் அனுமதியுடனே அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பீ.பெரேரா, எந்தவொரு செயற்பாடுகள் தொடர்பிலும் பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராணுவத்தினரை தலையிடச் செய்வது என்பது பெரும் அச்சுறுத்தல் மாத்திரமின்றி அடக்குமுறை முயற்சி எனவும் எச்சரித்தார்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊடகவியலாளர்களுக்காக தகவல் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வந்த அடையாள அட்டையை பாதுகாப்பு அமைச்சின் உறுதிப்படுத்தலுக்கு பின்னர் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

தொலைக்காட்சி , அலைவரிசை , பத்திரிகை , இணையத்தளம் மற்றும் பிரதேச வாரியாக செயற்பட்டு வரும் ஊடகவியலாளர்களுக்கு அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காகவே ஊடகவியலாளர்களின் தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் இதுவரையும் தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளை , பாதுகாப்பு அமைச்சின் ஊடாக வழங்க எடுத்திருக்கும் தீர்மானமானது ஊடகவியலாளர்களின் செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலேயே அமையப் பெற்றுள்ளது.

இந்தத் திட்டத்தின் ஊடாக இணையத்தளம் மற்றும் பிரதேச வாரியிலான ஊடகவியலாளர்களுக்கு பாரிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இதே வேளை அந்த தீர்மானத்தால் அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்வதில் காலதாமதமும் ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்தத் தீர்மானம் ஊடகச் சுதந்திரத்திற்கு பெரும் அச்சுறுத்தலாகும்.

இதுவரை காலமும் செயற்படுத்தப்பட்டுவந்த விதிமுறை தொடர்ந்தும் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என அவர்மேலும்தெரிவித்தார். (ஐ-4)

# மத்திய வங்கி விவகாரத்தில் பிரதமரும் பொறுப்புக்கூற வேண்டும்

## மரிக்கார் வலியுறுத்து



(கொழும்பு)

தேர்தலில் இலாபம் பெறும் நோக்கிலேயே ஜனாதிபதி கோட்டாபய ர்ாஜபக்ஷ மத்திய வங்கியின் அதிகாரிகளுக்கு கடும் தொனியில் ஆலோசனை வழங்கியதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் குற்றம்சாட்டினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிதியமைச்சர் மகிந்த ராஜபக்ஷவின் கீழேயே மத்திய வங்கியின் செயற்பாடுகள் நடத்தப்படுகின்றன.மத்திய வங்கி அதிகாரிகளின் செயற்பாடுகளை ஜனாதிபதி அண்மையில் கடுமையாக விமர்சித்திருந்தார்.

மத்திய வங்கி அதிகாரிகளின் செயற்பாடுகளை நாட்டின் பொருளாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துமென்றால் அதற்கு பொறுப்பான அமைச்சரும் இதற்கு பொறுப்புக் கூற வேண்டும். எனவே இந்தக் குற்றச்சாட்டுக்களை ஜனாதிபதி நிதியமைச்சர் மீதும் சுமத்த வேண்டும். தேர்தல் நடவடிக்கைகளை பின்னணியாக கொண்டு இந்தக் குற்றச்சாட்டை ஜனாதிபதி முன்வைக்கவில்லை என்றால் அதாவது நியாயமாகவே அவர் அதிகாரிகளை குறை கண்டிருந்தால் அந்தக் குற்றச்சாட்டை நிதியமைச்சர் மீதும் முன்வைத்திருக்க வேண்டும்.

இந்த நாட்டில் ஜனாதிபதிகளாக இருந்த இருவர் தற்போது பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக களமிறங்குகின்றனர்.

ஒருவர் 10 ஆண்டுகள் அதிகாரத்தில் இருந்த மகிந்த ராஜபக்ஷ, மற்றவர் ஐந்தாண்டுகள் அதிகாரத்தில் இருந்த மைத்திரிபால சிறிசேன, அவர்களுக்கு அதிகாரம் இருந்த போது செய்ய முடியாததை செய்வதற்கு தற்போது போட்டியிடுகின்றார்கள்.

இவர்கள்நாடாளுடன்றஉறுப்பினர்களாக, அமைச்சர்களாக மற்றும் ஜனாதிபதிகளாக இருந்த போது, கட்டியெழுப்ப முடியாது போன நாட்டை, கட்டியெழுப்புவதற்காக மீண்டும் தேர்தலில் நிற்கின்றனர்.

இது ஒரு வேடிக்கையான விடயமாகும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் மேலும் தெரிவித்தார். (ஐ-8)

# எம்.சி.சி. ஒப்பந்தத்தில் அரசாங்கம் கைச்சாத்திடத் திட்டம்- ஜே.வி.பி.

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் போது மிலேனியம் சவால் ஒப்பந்தம் குறித்து மிகைப்படுத்தி கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

எனினும் தற்போது பாராளுமன்றத் தேர்தல் நிறைவடைந்தவுடனேயே இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் என்பது தெளிவாகிறது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய வங்கிபோன்ற அரச நிறுவனங்களுடைய செயற்பாடுகளில் உத்தியோகபூர்வமாக தலையிடுவதை விடுத்து முறையற்ற விதத்தில் செயற்பட்டு ஜனாதிபதி தன்னுடைய பொறுப்புக்களை உணராதவராகின்றார்.

அத்துடன் தனது தனிப்பட்ட கருத்துக்கு பணிபுரிய வேண்டும் என்ற வழிமுறையானது ஜனநாயகம் உள்ள நாட்டிற்கு பாரிய நெருக்கடியாக அமையும்.

ஜனநாயக அமைப்புக்களில் குறைபாடுகள் காணப்படுகின்றன. அந்த குறைபாடுகளை சரி செய்வது பாராளுமன்றத்தின் கடமையாகும்.

எனினும் அவ்வாறான குறைபாடுகளை ஏற்படுத்தும் வகையில் ஜனாதிபதி ஜனநாயக அமைப்பின் கட்டமைப்பிற்கு வெளியில் சென்று செயற்படுவது பாரதூரமானதொன்றாகும்.

உதாரணமாக விசேட ஜனாதிபதி செயலணிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஜனாதிபதி செயலணிகள் நாட்டில் காணப்படும் ஜனநாயக கட்டமைப்பிற்கு அப்பால் செயற்படுவதாகும்.

பொறுப்புக்கூற வேண்டிய அமைச்சர்கள் தமது பொறுப்புக்களிலிருந்து விலகி அதிகாரிகள் மீது அந்தச் சுமையைத் திணிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழு முன்னாள் அமைச்சர் மற்றும் முன்னாள் ஜனாதிபதியை அழைக்க வேண்டுமல்லவா? ஆனால் அவ்வாறின்றி முன்னாள் பொலிஸ்மா அதிபர், முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஆகியோரை மாத்திரம் அழைத்து அவர்களில் தாம் இலக்கு வைத்துள்ளவர்கள் மீது குற்றஞ்சுமத்தி உண்மையில் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் ஒதுக்கப்படுகின்றார்கள்.

தேர்தலின் பின்னர் மிலேனியம் சவால் (எம்.சி.சி.) ஒப்பந்தம் தொடர்பில் சிறந்த முடிவு கிடைக்கும் என்று அமெரிக்க பிரதிநிதி தெரிவித்துள்ளார். எம்.சி.சி.ஒப்பந்தம் பாரதூரமானதொன்றுதான்.

எனினும் ஜனாதிபதித் தேர்தலின் போது அதனை மேலும் மிகைப்படுத்தி கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

எனினும் தற்போது பாராளுமன்றத் தேர்தல் நிறைவடைந்தவுடனேயே இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்படும் என்பது தெளிவாகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## இராசிபலன்

20.06.2020
ஆனி 06,சனிக்கிழமை
சதுர்த்தசி பிற்பகல் 12.28 மணிவரை
ரோகிணி பிற்பகல் 12.52 மணிவரை
சுபநேரம் 2.54-4.24 மணிவரை
இராகுகாலம் 8.54-10.24 மணிவரை
சந்திராஷ்டமம்- விசாகம்,அனுசம்
அமாவாசை விரதம்

வளவன்

**மேஷம்** குலதெய்வ வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், தன்னம்பிக்கையும்-துணிவும் அதிகரிக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்,கற்பனை மிகுதியான நாள்,எடுத்த காரியங்களில் திசைத் திருப்பங்கள் ஏற்படலாம்,போசன சுகமுண்டு.

**மிதுனம்** குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்,புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு,போசன சுகமுண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**சிம்மம்** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்,குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்,சிறப்பான நாள், அந்நியர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**கன்னி** தொழிலில் இருந்த எதிர்ப்புகள் விலகும்,பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்,பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்,அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்** பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், அருகில் இருப்பவர்கள் அனுசரித்துச் செல்வது நல்லது, தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**தனுசு** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும் ,உடல் நலன் சீராகும்,கடன் பிரச்சினையை தீர்க்க ஆக்க பூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள்.

**மகரம்** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்,வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்** தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், மனதில் தோன்றுவதை செய்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்,சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** இழு பறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள் சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

இன்றைய நாளைத் தனதென அமைப்பவனே இன்ப மனிதன்

# மட்டக்களப்பு பல்கலைக்கழக நிறுவனத்தின் 3 வங்கிக் கணக்கு விபரங்களை வழங்குக

## கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

மட்டக்களப்பு பல்கலைக்கழக நிறுவனத்துக்கு சொந்தமான, இலங்கை வங்கியின் காத்தான்குடி கிளையில் உள்ள மூன்று வங்கிக் கணக்கு விபரங்களை, நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்ன விடம் முன்வைத்த விசேட கோரிக்கையை அடுத்தே, குறித்த வங்கிக் கிளையின் முகாமையாளருக்கு நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

13 வங்கிக்கணக்குகளையும் ஆராய கொழும்பு பிரதான நீதவான் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அனுமதியளித்திருந்தார்.

அந்த அனுமதியின் பிரகாரம் பெறப்பட்டிருந்த அறிக்கைக்கு அமைய, மட்டக்களப்புப்பல்கலைநிறுவனத்தின்கொள்ளுப்பிட்டி இலங்கை வங்கிக் கிளையில் முன்னெடுத்துச் சென்ற வங்கிக்கணக்கின் கணக்கு கூற்று, காசோலை வரவுக் குறிப்புக்கள், வங்கிக்கொடுக்கல்-வாங்கல்கள் தொடர்பிலான குறிப்புக்கள், அட்டை கொடுக்கல்- வாங்கல்கள் விபரங்கள் என அனைத்தும் வெளிப்படுத்தப்பட்டன.

அதன்படி குறித்த வங்கிக்கணக்கு கடந்த 2016.01.04 ஆம் திகதி இலங்கை ரூபாக்களால் கொடுக்கல்-வாங்கல்களை தொடர முடியுமான நடைமுறைக் கணக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளமை வெளிப்படுத்தப்பட்டது.

அத்துடன் அந்த கணக்கை ஆரம்பிக்கும் செயற்பாடுகளில், குறித்த நிறுவனத்தின் தலைவர் மொஹம்மட் லெப்பை அஸீம் மொஹமட் ஹிஸ்புல்லா, பணிப்பாளர் அஹமட் ஹிஜாஸ் ஹிஸ்புல்லா ஆகியோருடன் expert business consultants எனும் தனியார் நிறுவனமும் தொடர்புபட்டுள்ளமை குறித்து நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

அத்துரலிய ரதன தேரர் 2019 ஜூன் 12 ஆம் திகதி முன்வைத்த முறைப்பாட்டுக்கு அமைய இடம்பெறும் குறித்த விசாரணைகளில், கடந்த 2016.01.14 ஆம் திகதி முதல் 2019.05.31 ஆகிய காலப் பகுதியில் 206 தடவைகளில் குறித்த கொள்ளுப்பிட்டி வங்கிக்கிளையில் உள்ள கணக்குக்கு 443 கோடியே 62 இலட்சத்து 82 ஆயிரத்து 426 ரூபாய் பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ளமை தெரியவந்தது.

அத்துடன் அந்த பணத்தில் 443 கோடியே 62 இலட்சத்து 46 ஆயிரத்து 122 ரூபாய் பணம் 825 தடவைகளில் அக்கணக்கிலிருந்து மீளப் பெறப்பட்டிருந்தன. அவ்வாறு குறித்த வங்கிக்கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட தொகையில், 364 கோடியே 9 இலட்சத்து 39 ஆயிரத்து 488 ரூபா பணம் 7 தடவைகளில் சவுதி அரேபியாவின் இன் ஹெரிரன்ஸ் அலி அப்துல்லா அல்யூர் அலிஜெபா என்பவரால் வைப்புச் செய்யப்பட்டிருந்ததாகவும் எப்.சி.ஐ.டி. வங்கி அறிக்கையை பகுப்பாய்வு செய்து நீதிமன்றுக்கு அறிவித்திருந்தது.

இவ்வாறான பின்னணியிலேயே தற்போது காத்தான்குடி இலங்கை வங்கிக் கிளையிலுள்ள 3 கணக்குகளின் விபரங்களை விசாரணைகளுக்காக எப்.சி.ஐ.டி. கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இந்திய இராணுவத்தினர் தாக்குதல் நான்கு பேர் பரிதாபமாக உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் நிகியல் மற்றும் பாக்சர் எல்லைக் கட்டுப்பாடு கோட்டுப் பகுதியில் இந்திய இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொது மக்களில் பெண் உட்பட 4 பேர் உயிரிழந்துள்ளதாக பாகிஸ்தான் நாட்டு இராணுவ செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் நிகியல் மற்றும் பாக்சர் எல்லைக் கட்டுப்பாடு கோட்டுப் பகுதியில் அமைந்துள்ள கிராமங்களில் வசிக்கும் பொதுமக்களைகுறிவைத்து இந்திய இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பாகிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது.

இந்த தாக்குதலில் பொது மக்களில் பெண் உட்பட 4 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அந்த நாட்டு இராணுவ செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.(ஜ-2)

# கொரோனாவைக் கட்டுப்படுத்திய ஜனாதிபதிக்கு சீனா பாராட்டு

(கொழும்பு)

இலங்கை சிறப்பாக கொரோனாவை கட்டுப்படுத்தியமைக்கு சீன ஜனாதிபதி ஜி.ஜின் பிங் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சீனத் தூதுவருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் இடையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இன்று கொண்டாடப்படவுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பிறந்த தினத்தை முன்னிட்டு சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே, இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்து வதற்கு சீன அரசாங்கம் மருத்துவ உதவிகளை அனுப்பியதையும் சீன ஜனாதிபதி நினைவு படுத்தியுள்ளார்.

இந்த நிலையில் இவ்வாறான துரதிர்ஷ்டவசமான நிலையில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்கு சீன அரசாங்கத்திற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நன்றி தெரிவித்துள்ளார். (ஜ-8)

# டுபாயிலிருந்து வந்த 10 பேருக்கு கொரோனா

(நெளுக்குளம்)

டுபாயில் இருந்து இலங்கை திரும்பிய நிலையில் வவுனியா வேலங்குளம் தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டவர்களில் 10 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் தங்கியுள்ள இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வரும் செயற்பாடு இடம்பெற்று வரும் நிலையில், நேற்று முன்தினம் டுபாயிலிருந்து நாடு திரும்பிய 168 பேர் வவுனியா வேலங்குளம் தனிமைப்படுத்தல் முகாமுக்கு கொண்டு வரப்பட்டனர்.

இவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் கொழும்பில் வைத்து நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

இதில் கர்ப்பிணி பெண் உட்பட 10 பேருக்கு கொரோனா தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (4-5-299)

# சட்டவிரோத மணல் அகழ்வு இரண்டு இலட்சம் அபராதம்

(தர்மபுரம்)

தர்மபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லாறு, ஊழவனூர், போன்ற பகுதிகளில் கடந்த 16,17 ஆம் திகதிகளில் அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட நான்கு உழவு இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அதனது சாரதிகளும் கைது செய்யப்பட்டனர்.

அவர்களை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போது 4 உழவு இயந்திரங்களும் தலா 50 ஆயிரம் விகிதம் 2 இலட்சம் ரூபாய் விதிக்கப்பட்டது. (5-316)

# அந்தோனியார் ஆலய திருவிழா மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன்

(யாழ்ப்பாணம்)

தற்போது நாட்டிலுள்ள கொரோனா சூழ்நிலையில் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய திருவிழாவில் பங்கேற்கும் மக்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு ஆலய நிர்வாகமும் திருவிழா நடைமுறை ஒழுங்குகளை பின்பற்றவுள்ளது.

அதனடிப்படையில் நற்கருணை திருப்பலி இன்று மாலை 5.00 மணிக்கும் திருவிழாத் திருப்பலி நாளை காலை 5.30, காலை 7.00, காலை 9.00, மாலை 4.30 ஆகிய நேரங்களில் நடைபெறும்.

ஒவ்வொரு திருப்பலிக்குப் பின்பும் புனித அந்தோனியாருடைய திருச்சொரூப ஆசீர்வாதமும் வழங்கப்படும்.

இயன்றவரை திருவிழாத் திருப்பலிகளில் பங்கு கொள்வதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். அத்தோடு இன்றைய சூழலில் எதுவித வாகன பாதுகாப்பு நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது.

மேலும் ஆலயத்திற்கு உள்ளேயோ அல்லது முன்பக்க வெளியிலோ வாகனங்கள் நிறுத்தப்படுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் இதனை கருத்திற் கொண்டு தமக்கு ஒத்துழைப்பு நல்குமாறு புனித ஆலய பங்குத்தந்தை கேட்டுக்கொண்டுள்ளார். (5)



கிளிநொச்சி உதய நகர் கிழக்கு சிவன் கோவில் வீதிப் பாலம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிதன் தலைமையில் நேற்றுக்காலை நடைபெற்றது. இந்நிகழ்வில் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஜீவராசா, பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



உலக சுற்றாடல் தினத்தினை முன்னிட்டு (ஜுன்-8) வனரோபா தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நாற்றுமேடைகளிலிருந்து பெறப்பட்ட 200 மலைவேம்பு (மகோகனி) கன்றுகள் தென்மராட்சி பிரதேச செயலக வளாகம் மற்றும் பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட 60 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுமுள்ள பொது இடங்களில் நேற்று முன்தினம் வியாழன் நடுகை செய்யப்பட்டன. (படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)

# பொலிஸ் அதிகாரி விபத்தில் பலி; சட்டத்துறை மாணவனுக்கு பிணை

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர் விபத்தில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சட்டத்துறை மாணவன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தரித்து ரத்வத்த எனும் 24 வயதுடைய மாணவரே இவ்வாறு நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்த பொலிஸ் உத்தியோகத்தர் விபத்தில் உயிரிழந்தார்.

இதனையடுத்து விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் இந்த மாணவன் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-8)



யாழ்.மாவட்ட பாதுகாப்பு படைத் தலைமையகத்தினால் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமூக சேவைகளில் ஒன்றாகிய வீடற்ற வறிய குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு வீடு அமைத்துக் கொடுக்கும் செயற்றிட்டத்தின் கீழ் இராணுவத்தால் அமைக்கப்பட்ட வீடு பலாலி தெற்கு வயாவிளானில் வசிக்கும் பெண் ஒருவருக்கு நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரியவினால் கையளிக்கப்பட்டது.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 180 | 120 | 140 |
| தக்காளி | 220 | 220 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 80 |
| கோவா | 150 | 130 | 150 |
| கரட் | 120 | 160 | 200 |
| பூசணி | 50 | 40 | 50 |
| புடோல் | 50 | 60 | 120 |
| வாழைக்காய் | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 200 | 250 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 200 | 240 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 120 |
| பயற்றங்காய் | 150 | 80 | 80 |
| லீக்ஸ் | 140 | 150 | 200 |
| பீற்றூட் | 120 | 130 | 120 |
| கறிமிளகாய் | 80 | 80 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 400 |
| போஞ்சி | 130 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 20 | 30 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 45 | 40-60 |
| இராசவள்ளி | 30 | 30 | 250 |
| வெங்காயப்பூ | 300 | 250 | -- |
| முள்ளங்கி | 80 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 |
| வல்லாரை | 40 | 40 | 20 |
| ஈரப்பலா | 60 | 70 | 80 |

# உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டாலும் கண்ணிவெடிகளுடன் 16 மில்லியன் சதுரஅடி நிலப்பரப்பு

(கொழும்பு)

**உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப் பட்டுள்ள போதிலும் நாட்டில் 16 மில்லியனுக்கும் அதிக சதுர அடி அளவான காணிப்பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்படாதிருப்பதாக அடை யாளப்படுத்தப்பட்டுள்ளது.**

அதில் திருகோணமலை மாவட்டத்தில் 2 இலட்சத்து 56 ஆயிரத்து 136 சதுர அடி அளவி லான காணிப் பகுதிகளில் இன் னும் கண்ணிவெடிகள் அகற்றப் படாமல் உள்ளன.


திருகோணமலை மாவட் டத்தில் மீண்டும் கண்ணிவெடி அகற்றம் செயற்றிட்டம் தொடர் பான முக்கிய கலந்துரையாடல் நேற்று முன்தினம் வியாழக் கிழமை திருகோணமலை மாவ ட்டச் செயலகத்தில் இடம்பெற்ற போதே இந்தத் தகவல் வழங் கப்பட்டது.

இதன்போது திருகோண மலை மாவட்டத்தில் கண்ணி வெடிகள் காணப்படுவதாக இனங் காணப்பட்ட பிரதேசங் கள் தொடர்பாகவும் மாவட்டத் தில் இதுவரை அகற்றப்படாத கண்ணி வெடிகளை அகற்றும் பொறிமுறை தொடர்பான விட யங்கள் உட்பட அவற்றை அக ற்றுவதற்கான தொழில்நுட் பங்கள் தொடர்பாகவும் ஆரா யப்பட்டது.

இந்நிலையில் மாவட்டத் தில் கண்ணிவெடி அகற்றப்ப டுவதற்கான உரிய அனுமதி களைப் பெறுவதில் பாரிய சிக் கல் நிலை காணப்படுவதாக அமைச்சின் செயலாளர் சுட்டிக் காட்டினார்.

என்றாலும் கூடியளவில் கண்ணிவெடிகள் காணப்படு வதாக இனங்காணப்பட்ட பகுதி கள் அரச திணைக்களங்க ளுக்கு உட்பட்ட பகுதிகளாக இனங்காணப்பட்டிருப்பதால் அப்பகுதிகளில் அகழ்வுப் பணி களில் ஈடுபடுவதற்கான அனு மதிகள் முறையாக பெறப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்து வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## கஞ்சிபானை இம்ரானின் தந்தை மீது தாக்குதல்; சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணை



(கொழும்பு)

பிரபல பாதாள உலகத் தலைவனாக கருதப்படும் கஞ்சிபானை இம்ரான் என அறியப்படும் மொஹம்மட் நஜீம் மொஹ ம்மட் இம்ரானின் தந்தை மீது கூரிய ஆயுதங்களால் தாக்குல் நடத்தப்பட்ட நிலையில் அந்த விவகாரத்தில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை 48 மணி நேரம் தடுத்து வைத்து விசாரிக்க நீதி மன்றம் மாளிகாவத்தை பொலிஸாருக்கு அனுமதியளித்துள்ளது.

கொழும்பு மேலதிக நீதவான் காஞ்சனா நெரங்சலா டி சில்வா இதற்கான அனும தியை நேற்று முன்தினம் வழங்கினார்.

கடந்த புதன்கிழமை மாலை 6.30 மணியளவில் மாளிகாவத்தை சத்தர்ம மாவத்தை அருகே ஆட்டோவில் வந்த மூவரால் குறித்த தாக்குதல் நடத்தப்பட் டுள்ளதாகவும் தாக்குதலில் படுகாயம டைந்துள்ள 65 வயதான கஞ்சிபானை இம்ரானின் தந்தை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த குறித்த நபரின் உடல் முழுவதும் வெட்டுக் காயங்கள் உள்ளதா கவும் அவருக்கு தீவிர சிகிச்சையளிக் கப்பட்டு வருவதாகவும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இச் சம்பவம் தொடர்பில் மாளிகாவ த்தை பொலிஸார் மேலதிக விசாரணை களை முன்னெடுத்துள்ளனர். (ஜ-4)

## அவுஸ்திரேலியாவிலிருந்து 98 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் இருந்து நாடு திரும்ப முடியாமல் நிர்க்கதிக்குள்ளாகி இருந்த மேலும் 98 இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான யூ.எல்-605 எனும் சிறப்பு விமானம் ஊடாக் குறித்த இலங்கை யர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட் டுள்ளனர்.

குறித்த விமானம் அவுஸ்திரேலி யாவின் மெல்பேர்ன் நகரில் இருந்து நேற்று அதிகாலை 5.10 இற்கு கட்டுநாய க்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

அவுஸ்திரேலியாவில் இருந்து நாடு திரும்பிய இலங்கையர்கள் அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத் தப்பட்டனர்.

பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளியாகும் வரை குறித்த பயணிகள் அனைவரும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அண்மித்துள்ள ஹோட்டல்களில் தங்க வைக்கப்பட்ட னர். (ஜ-8)


**மணமகன் தேவை**

1977, பூசம் 7 இல் செவ்வாய், மண மாகாத மணமகளிற்கு வரன் பார்க்கின் றோம். (விவாகரத்தான, மனைவி இழந் தவர்களும் தொடர்பு கொள்ளலாம்)

தொடர்புகளுக்கு:
0763260323
(C-9330)


## ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் கைது

(கற்பிட்டி)

கற்பிட்டி பகுதியில் தேர்தல் சுவ ரொட்டிகளை விநியோகித்த ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட வேட்பாளர் ஒருவர் நேற்று கைது செய் யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட வேட் பாளரிடமிருந்து 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுவரொட்டிகள் கைப்பற்றப் பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித் தனர். (ஜ-4)


**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 3
கி.பா: 41 சூரிசெவ் 10 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: பட்டதாரி, அபிவிரு த்தி உத்தியோகத்தர்.
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர்
தொ.இ: B/10829

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 1
கி.பா: 29 ¾ செவ் 4 இல்
உயரம்: 168cm
தகைமை/தொழில்: B.Sc, PGDE ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச தொழில் பார்க்கும் மணமகள் ஆசிரியர் விரும்பத்தக்கது
தொ.இ: B/10830

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மகம் 3
கி.பா: செவ் 10 இல்
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த கடையில் வேலை பார்க்கின்றார்
எதிர்பார்ப்பு: சாதாரண பெண்
தொ.இ: B/10831

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த தனியார் ஆசிரியர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10832

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: - சூரிசெவ் 8 இல்
உயரம்: 156cm
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தி யோகம். வெளிநாடும் ஏற்கப்படும்
தொ.இ: G/10847

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 50 செவ் 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்.
எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகம் பார்க்கும் மணமகன்
தொ.இ: G/10853

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: அத்தம் 2
கி.பா: 30 ¼ சூரிசெவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: பொருளியல் கலைமாணி வரி மதிப்பீட்டாளர்
எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகம்
தொ.இ: G/10854

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: அனுசம் 1
கி.பா: சூரிசெவ் 9 இல்
உயரம்: 165cm
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த தனியார் கம்பனியில் வேலை
எதிர்பார்ப்பு: மணமகள் விவாகரத்தா னவர் பிள்ளைகள் இல்லை விவா கரத்தும் ஏற்றுக்கொள்ளப்படும்.
தொ.இ: G/10858

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# கடற்படை அதிகாரிகளுடன் விமானம் தரையிறக்கம்

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து 58 இந்திய கடற்படை அதிகாரிகளு டன் விசேட விமானம் ஒன்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்தியாவின் சென்னை நகரில் இருந்து ஸ்பைஸ் ஜெட் விமான சேவைக்குச் சொந்த மான எஸ்.ஜி 9667 எனும் சிற ப்பு விமானம் நேற்று முன்தி னம் இரவு 7.12 இற்கு கட்டுநாய க்க சர்வதேச விமான நிலை யத்தை வந்தடைந்தது.

இவ்வாறு நாட்டுக்கு வருகை தந்த அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டனர்.

குறித்த பி.சி.ஆர். பரிசோத னைகளை மேற்கொள்வதற்காக கொழும்பு தனியார் வைத்தி யசாலையின் ஊழியர்கள் கட்டு நாயக்க சர்வதேச விமான நிலை யத்திற்கு வருகை தந்திருந்த னர்.

அத்துடன் பி.சி.ஆர். பரிசோ தனை முடிவுகள் வெளியாகும் வரை பயணிகள் அனைவரும் கட்டு நாயக்க சர்வதேச விமான நிலையத்தை அண்மித்துள்ள ஹோட்டல்களில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ஜ-8)

# குப்பைகளை உணவாக்கும் யானைகள்



(திருமலை)

திருகோணமலையில் கன் னியா பிரதேசத்தில் உள்ள குப் பைகள் கொட்டும் தளத்தில் கொட்டப்படும் குப்பைகளை 42 யானைகள் உணவாக உட் கொள்ளும் பழக்கத்தை கொண் டுள்ளன.

32 ஏக்கர் நிலப்பரப்புடைய இந்த குப்பை கொட்டும் தளத் திற்கு நாளாந்தம் கொட்டப்படும் குப்பைகளை பிரித்து எடுக்கும் நடைமுறையானது பின்பற்றப் படுவதில்லை.


இந்நிலையில், இவ்வாறு பிரிக்கப்படாத குப்பைகளை உணவாக உண்டு பழக்கப்பட்ட யானைகள் குப்பைகளோடு கலந்துள்ள பிளாஸ்டிக், இறப்பர், பொலித்தீன் போன்ற சமிபாடு அடையாத பொருட்களை உண வாக உட்கொள்கின்றன. (ஜ-4)

# சிறைச்சாலைகளுக்குள் எதிர்காலத்தில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறக்கூடாது

## பாதுகாப்புச் செயலர் அதிகாரிகளுக்கு அறிவுரை

(கொழும்பு)

**சிறைச்சாலைகளில் எதிர்காலத்தில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறக்கூடாது எனவும் அவ்வா றான சட்டவிரோத செயல்கள் இடம்பெறுவதற்கு உதவிய அதிகாரிகளுக்கு எதிராக தற்போது குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் ஊடாக விசாரணைகள் இடம்பெறுவதாகவும் பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.**



சிறைச்சாலை அதிகாரிகளு க்கு நேற்று முன்தினம் நடத் தப்பட்ட செயலமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், இவ்வாறான ஊழல் மிகு அதிகாரிகள் மீது சட்டமா அதிபர் எதிர்வரும் நாட்களில் சட்ட நட வடிக்கை எடுப்பார் எனவும் சிறைச்சாலைகள் சேவையை திறம்பட முன்னெடுக்க அதனு டன் சம்பந்தப்பட்ட தரப்பினர் பொறுப்புடன் செயற்பட வேண் டும் எனவும் ஊழல் செயற்பா டுகளில் ஈடுபடாது ஓய்வு பெற்ற பின்னரும் தமது சேவையில் திருப்தியடையக் கூடிய வகை யில் சிறைச்சாலை அதிகாரிகள் செயற்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# சைவத் தமிழர்களின் குரல் எங்கே நசுக்கப்படுகிறதோ அங்கே தமிழ்த் தேசிய மக்கள் கட்சியின் குரல் ஒலிக்கும்

## வன்னி தேர்தல் தொகுதி சுயேட்சைக்குழு முதன்மை வேட்பாளர் மனோஜங்கரசர்மா



(மன்னார்)

"சைவத் தமிழர்களுக்கு" என மன்னாரில் இருந்து குரல் ஒன்று ஓங்கி ஒலிக்க வேண் டும் என்ற நோக்கத்துடன் வன் னியில் "தமிழ்த் தேசிய சைவ மக்கள் கட்சி" இம்முறை சுயேட் சையாக பாராளுமன்ற தேர்த லில் போட்டியிடுகின்றது என சுயேட்சைக்குழு 01 இன் முத ன்மை வேட்பாளர் மனோ ஜங்கரசர்மா தெரிவித்தார்.

வன்னி தேர்தல் தொகு தியில் சுயேட்சைக்குழு 1 இல் போட்டியிடும் "தமிழ்த் தேசிய சைவ மக்கள் கட்சி" யின் ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் வியாழக்கிழமை மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இடம் பெற்றது.

இதன்போது கருத்து தெரி விக்கையிலேயே முதன்மை வேட்பாளர் மனோ ஜங்கரசர்மா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய 3 மாவட்டங்களையும் உள்ளட க்கி இந்த வன்னித் தேர்தல் தொகுதியில் சைவத் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக வும் தமிழ் மக்களின் உரிமை களுக்காகவும் ஏற்கனவே இரு க்கின்ற கட்சிகளினால் மக்க ளுக்கு போதிய உரிமைகளை பெற்றுக் கொடுக்காத காரணத் தினாலும் மக்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுப்ப தற்காக எங்களது மக்களின் விருப்பத்தின் பேரில் தமிழ்த் தேசிய சைவ மக்கள் கட்சி உத யமாகி இம்முறை தேர்தலைச் சந்திக்கின்றது.

எனவே எங்களது கட்சிக்கு முழுமையான ஆதரவினை வழங்கி எங்களை பாராளு மன்றம் அனுப்பினால் நிச்சய மாக நாங்கள் எங்கள் மக்க ளுக்காக செய்ய வேண்டிய வற்றை நாங்கள் செய்வோம்.

செய்ய இயலாத விடயங் களை நாங்கள் செய்யப் போவ தில்லை. அடிப்படை உரிமை களில் இருந்து எங்களது மக் கள் சமயத்தோடு வாழ்வதற் காக நாங்கள் என்றென்றும் பாடுபடுவோம் என்று கூறிக் கொள்கிறேன். "தமிழ்த் தேசிய வைச மக்கள்" கட்சியின் சுயே ட்சைக்குழு 01 இற்கு சின்ன மாக கோடரி சின்னம் வழங் கப்பட்டுள்ளது.

இந்தச் சின்னத்தின் அர்த் தத்தை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

பரம்பொருள் சிவபெருமா னின் கையில் இருக்கின்ற ஆயுதம் தான் இந்த கோடரி சின்னம். பரசுராமன் என்று சொல்லப்படுகின்ற அந்த மாவீர னுக்கு அதர்மத்தை அழிப்பதற் காக சிவபெருமானால் வழங் கப்பட்ட ஆயுதம் அந்த கோடரி.

அந்தவகையில் இறைவ னால், சிவபெருமானால் எங்க ளுக்கும் இந்த கோடரிச் சின் னம் வழங்கப்பட்டுள்ளது.

எனவே நாங்கள் சிவன் வழியில் சென்று இந்த சின் னத்தைப் பயன்படுத்தி அனை த்து மக்களுக்கும் சேவை செய்ய தயாராக இருக்கின் றோம்.

தமிழ்த் தேசிய சைவக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாப னத்தை கடந்த வாரம் உத் தியோகபூர்வமாக வெளியிட்டு இருந்தோம். சைவத் தமிழர் களுக்காகவே இந்த கட்சி ஆரம் பிக்கப்பட்டது. சைவத் தமிழர் களின் குரல் எங்கே நசுக்கப்ப டுகின்றதோ அங்கே நாங்கள் ஓங்கி ஒலிப்போம். நாங்கள் எல்லா மதங்களையும் மதிக் கின்றோம் என்பதை இவ்விடத் தில் பதிவிடுகின்றோம்.

இக்கட்சியானது எந்த ஒரு மதத்தினருக்கும் எதிராகவும் மத வாதத்தை தூண்டக்கூடிய கட்சியாக செயற்பட்டதும் இல்லை. செயற்பட போவதும் இல்லை. மேலும் அரசியல்கைதி களின் விடுதலை, முன்னாள் போராளிகளின் வாழ்வாதா ரங்கள், அடிமட்ட நிலையில் உள்ள மக்களின் வாழ்வாதா ரம், கல்வி வளர்ச்சிக்காக நாங் கள் குரல் கொடுக்க இருக்கின் றோம். எந்தவித உள்நோக்கம் மற்றும் அரசியல் நோக்கம் இன்றி தேர்தல் விஞ்ஞாபன த்தை நாங்கள் குழுவாக தயா ரித்துள்ளோம்.


நாங்கள் வெற்றி பெற்றால் தேர்தல் விஞ்ஞாபனத்தின் படி ஒவ்வொரு விடயங்களையும் நடைமுறைப்படுத்தி மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உதவி களை மேற்கொள்வோம் என் பதனை கூறிக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித் தார். (ஜ-4)

# வடமாகாணத்தில் அரச திணைக்களங்களினால் காணிகள் கையடக்கலும் மக்களின் காணிப் பிரச்சினையும் - ஒரு பார்வை



04

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.




வவுனியா மாவட்டத்தில் 2010 வரையில் வன ஜீவராசி பாதுகாப்பு பிரதேசமாக எதுவும் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட பிரதேசங்கள் படம்-1 இல் காட்டப்பட்டுள்ளன. அப் பிரதேசத்தில் இருந்த சரணாலயங்கள் சுண்டிக்குளம், மன்னார், கட்டுக் கரைக்குளம், மடு றோட், வவுனிக்குளம் மற்றும் கொக்கிளாய் என்பனவாகும்.

2010 ஆம் ஆண்டு வரையில் 6 சரணாலயப் பிரதேசங்களே அடையாளம் காணப்பட்டிருந்தன. ஆனால் 2014 இல் மொத்தமாக 17 இடங்கள் வனஜீவராசிகள் பாதுகாப்பு பிரதேசமாக அடையாளம் காணப்பட்டு சிபாரிசு செய்யப்பட்டுள்ளதோடு இருந்த சரணாலயப் பிரதேசங்களின் பரப்பளவும் பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் இவற்றில் சுண்டிக்குளம், மடு றோட் என்பன தேசிய பூங்காவாக தரம் உயர்த்தப்பட்டிருப்பதோடு புதிதாக நெடுந்தீவு தேசிய பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது. தேசிய பூங்கா பிரதேசத்தில் அனுமதியில்லாமல் மக்கள் நடமாட்டம் செய்ய முடியாது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதனை படம் -2 இல் காணலாம்.

அறிக்கையில் கூறப்பட்டுள்ளவாறு யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்த 6037 ஹெக்டேயர் வனஜீவராசிகள்பாதுகாப்புபிரதேசம் 80,903 ஹெக்டேயர் ஆக அதிகரிக்க சிபாரிசு செய்யப்ப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்த 5031 ஹெக்டேயர் வனஜீவராசிகள் பாதுகாப்பு பிரதேசம் 9838 ஹெக்டேயராக அதிகரிக்க சிபாரிசு செய்யப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்த 10,256 ஹெக்டேயர் வனஜீவராசிகள் பாதுகாப்பு பிரதேசம் 54,069 ஹெக்டேயராக அதிகரிக்க சிபாரிசு செய்யப்ப்பட்டது. மன்னார் மாவட்டத்தில் இருந்த 22,173 ஹெக்டேயர் வனஜீவராசிகள் பாதுகாப்பு பிரதேசம் 70,928 ஹெக்டேயராக அதிகரிக்க சிபாரிசு செய்யப்பட்டது. வவுனியா மாவட்டத்தில் புதிதாக 37,079 ஹெக்டேயர் வனஜீவராசிகள் பாதுகாப்பு பிரதேசம் உருவாக்க சிபாரிசு செய்யப்பட்டது.

அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருந்தது என்னவென்றால், வனத்துறை திணைக்களத்தின் தகவலின்படி 2010 இல் வடமாகாணத்தில் மொத்தமாக 478,685 ஹெக்டேயர் பிரதேசம் பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசமாக இருந்துள்ளது. அதில் 5547 ஹெக்டேயர் பிரதேசம் யாழ்ப்பாண மாவட்டத்திலும் 45,631 ஹெக்டேயர் பிரதேசம் கிளிநொச்சி மாவட்டத்திலும் 178,386 ஹெக்டேயர் பிரதேசம் முல்லைத்தீவு மாவட்டத்திலும் 125,288 ஹெக்டேயர் பிரதேசம் மன்னார் மாவட்டத்திலும் 123,833 ஹெக்டேயர் பிரதேசம் வவுனியா மாவட்டத்திலும் 2010 வரையில் பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசமாக அடையாளம் காணப்பட்டிருந்தது.

2010 இல் வனத்துறை திணைக்களத்தின் பிரகடனப்படுத்தப்பட்ட வன ஒதுகீடுகளாக (declared forest reserves) கிளிநொச்சி மாவட்டத்தில் பளை வன ஒதுக்கீடு, வட்டக்கச்சி வன ஒதுக்கீடு (தேராவில்), இரணைமடு வன ஒதுக்கீடு, கிளிநொச்சி வன ஒதுக்கீடு, அக்கராயன் வன ஒதுக்கீடு, சுன்னவில் வன ஒதுக்கீடு, மண்டக்கலர் வன ஒதுக்கீடு, நாகபடுவான் வன ஒதுக்கீடு என்பனவும் மன்னார் மாவட்டத்தில் நீந்தவில் வன ஒதுக்கீடு, மாவில்லு வன ஒதுக்கீடு, வேப்பல் வன ஒதுக்கீடு என்பனவும் முல்லைத்தீவு மாவட்டத்தில் வட்டக்கச்சி வன ஒதுக்கீடு, இரணைமடு வன ஒதுக்கீடு, பனிக்கன்குளம் வன ஒதுக்கீடு, வன்னிவிளாங்குளம் வன ஒதுக்கீடு, தேராவில் ஒட்டுசுட்டான் வன ஒதுக்கீடு, சாமல்குளம் வன ஒதுக்கீடு, தண்டுவான் வன ஒதுக்கீடு, குளமுறிப்பு "எ" வன ஒதுக்கீடு, குளமுறிப்பு "பி" வன ஒதுக்கீடு, நாகன் சோலை வன ஒதுக்கீடு, ஆண்டான்குளம் வன ஒதுக்கீடு என்பனவும் வவுனியா மாவட்டத்தில் வன்னி விளாங்குளம் வன ஒதுக்கீடு, சாமல்குளம் வன ஒதுக்கீடு, பரந்தன் வன ஒதுக்கீடு, நைனாமடு வன ஒதுக்கீடு, இறம்பைக்குளம் வன ஒதுக்கீடு, மெல்குளம் வன ஒதுக்கீடு, மாமடு வன ஒதுக்கீடு, மகா இறம்பைக்குளம் வன ஒதுக்கீடு, பூவரசங்குளம் வன ஒதுக்கீடு, இராசேந்திரன்குளம் வன ஒதுக்கீடு, தோணிக்கல் வன ஒதுக்கீடு, குருங்கலிகுளம் வன ஒதுக்கீடு என்பனவும் காணப்பட்டன.

மதிப்பீட்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ளவாறு யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்த 5547 ஹெக்டேயர் பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசம் 63,448 ஹெக்டேயர் ஆக அதிகரிக்க சிபாரிசு செய்யப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்த 45,631 ஹெக்டேயர் பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசம் 49,669 ஹெக்டேயராக அதிகரிக்க சிபாரிசு செய்யப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்த 178,386 ஹெக்டேயர் பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசம் 189,620 ஹெக்டேயராக அதிகரிக்க சிபாரிசு செய்யப்பட்டது. மன்னார் மாவட்டத்தில் இருந்த 125,288 ஹெக்டேயர் பாதுகாக்கப்பட்ட வ்னப் பிரதேசம் 136,076 ஹெக்டேயராக அதிகரிக்க சிபாரிசு செய்யப்பட்டது. வவுனியா மாவட்டத்தில் இருந்த 123,833 ஹெக்டேயர் பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசம் 127, 883 ஹெக்டேயர் ஆக அதிகரிக்க சிபாரிசு செய்யப்பட்டது.

குறிப்பு- வனஜீவராசிகள் பாதுகாப்பிற்காக அடையாளம் காணப்பட்ட உத்தேச பிரதேசத்தின் பெரும் பகுதி முன்மொழியப்பட்ட காடுகளுக்குள் வருவது கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

வட மாகாணத்தில் பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசம் மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு பிரதேசம் படம்-3 இல் நிறந்தீட்டிக் காட்டப்பட்டுள்ளன. அப்படியாயின் மிகுதி பிரதேசம் மட்டுமே மக்களின் தேவைக்கா?

இம் மதிப்பீட்டு ஆய்வின் அடிப்படையில் தொல்பொருள் திணைக்களம் வடக்கு மாகாணத்தில் போர் காரணமாக புறக்கணிக்கப்பட்ட 341 புராதன (பண்டைய) இடங்களை இதுவரை கண்டுபிடித்துள்ளதாக கூறுகின்றது. அதில் 125 இடங்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலும் 68 இடங்கள் வவுனியா மாவட்டத்திலும் 66 இடங்கள் மன்னார் மாவட்டத்திலும் 15 இடங்கள் கிளிநொச்சி மாவட்டத்திலும் 67 இடங்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கூறுகின்றது. இவ்வாறு அடையாளம் காணப்பட்ட பல இடங்கள் படம்-4 இல் காட்டப்பட்டுள்ளன. இவ்விடங்கள் எல்லாம் தொல்பொருள் திணைக்களத்தால் கையடக்கப்பட்டால் மக்கள் மேலும் பல பிரச்சினைகளை எதிர் கொள்வார்கள்.

இம் மதிப்பீட்டு ஆய்வின் முடிவில் கண்டறியப்பட்டவை அல்லது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அல்லது கொடுக்கப்பட்ட சிபாரிசுகள் என்பவற்றில் வடமாகாண மக்களுக்கு பிரச்சினைக்குரிய சிபாரிசுகள் பின்வருவனவாகும்.

❖ வன கட்டளைச் சட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டு வர்த்தமானி செய்யப்பட்ட, வனப்பகுதிகளின் எல்லைகளை அடையாளம் கண்டு வனத்திணைக்களத்தின் கீழ் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்.

❖ வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மிகவும் உணர்திறன் வாய்ந்த வனவிலங்குகள் வாழ்வதாக அடையாளம் கண்டுள்ள பகுதிகளை தாவர மற்றும் ஜீவராசிகள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வர்த்தமானி செய்தல்.

❖ தொல்பொருள் திணைக்களம் சுமார் 341 தொல்பொருள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அடையாளம் கண்டது. அவற்றுள் ஏற்கனவே வர்த்தமானி அறிவிப்பு செய்யப்பட்டவை தவிர மற்றவற்றை வர்த்தமானி அறிவிப்பிப்பு செய்ய நடவடிக்கை எடுத்தல்.

மேற்கூறப்பட்டவாறு வனப்பிரதேசம், வனஜீவராசிகள் பாதுகாப்பு பிரதேசம் மற்றும் தொல் பொருள் பிரதேசம் ஆகியவற்றை அடையாளம் காணும்போது பல தவறுகள் ஏற்பட்டுள்ளதாகவும் அதனால் பல பிரச்சினைகள் தோன்றியுள்ளதாகவும் கூறப்படுகிறது. இப் பிரச்சினைகளுக்கு காரணமாக பின்வருவனவற்றையும் கருதலாம்.

❖ வடமாகாணத்தின் சுற்றுச் சூழலை நன்கு அறிந்த எவரும் இம் மதிப்பீட்டு ஆய்வுக் குழுவில் இடம்பெறவில்லை.

❖ இம் மதிப்பீட்டு ஆய்வுக்கு பல கருத்தரங்குகள், செயல் அணிகள் வடக்கில் உள்ள மாவட்டங்கள் தோறும் நடத்தப்பட்டன. அக்கருத்தரங்குகளில் மாவட்டங்களின் அரச அதிபர்கள் உட்பட பல வட மாகாண உயர் அதிகாரிகள் மற்றும் யாழ்.பல்கலைக்கழக உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டார்கள். மாவட்ட கருத்தரங்குகளின் படங்களும் அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளன. அவர்களினது பரிந்துரைகளும் உள்வாங்கப்பட்டதாகவே அதன் இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இறுதி அறிக்கையில் அது பின்வருமாறு கூறப்பட்டிருந்தது.

(தொடரும்...)

ஆன்மீகம்

# அற்புதமான சாவி ஆறாவது அறிவு!

உயர்ந்த ஒரு பரிசு நம் அனைவருக்கும் கிடைத்திருக்கிறது. ஆனால், அதைப்பெற்றுக்கொண்ட பலபேர்களுக்குத்தான் அது ''பெறற்கரிய பரிசு'' என்றே தெரியவில்லை. பரிசு பெற்றவர்களில் சிலரே அதை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டார்கள். பலருக்குப் பரிசு வெறும் தரிசாக விளைச்சல் காணாமல் போய்விட்டது.

மானிட தேகம் தான் அம்மகத்தான பரிசு! ஆறறிவு பெற்ற ஆண், பெண்ணாக மனித இனத்தில் பிறந்திருக்கிறோமே. அதுதான் இறைவன் நமக்குத் தந்த அருட் கொடை!

ஆதி பகவன் நிகழ்த்திய பரிசுப் போட்டியில் எல்லோருமே குரோர்பதியாக ஆகியிருக்கிறோம்.

ஆடாகவோ, மாடாகவோ, ஈயாகவோ, கொசுவாகவோ பிறக்காமல் மனிதர்களாக நாம் கண் மலர்ந்ததால் தானே 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா! இறைவா!' என்று பாரதியின் பாடலை நம்மாலும் பாட முடிகிறது. இனியது எது? பெரியது எது? அரியது எது? என தமிழ்க் கடவுள் முருகன் குறும்புச் சிறுவனாக வந்து வினாவிடுத்ததையும் அதற்கு அற்புதச் சொற்பதங்களில் ஔவை மூதாட்டி பாட்டில் பதில் அளித்ததையும் நாம் அனைவருமே அறிந்திருப்போம்.

அப் பாட்டுத் தொடரில் 'அரிது! அரிது! மானிடர் ஆதல் அரிது!' என்கிறாள் ஔவை.

'எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிது அரிது காண்
இப் பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?'



என்று தாயுமானவர் ஔவையை வழி மொழிந்து எச்சரிக்கையும் நமக்கு விடுக்கிறார்.

எண்பத்துநான்கு இலட்சம் உயிர்வகைகளில் மானுட தேகம் எடுத்து அல்லவா நாம் தோன்றியிருக்கின்றோம்.

உலகில் எத்தனை உயிர்கள் இருக்கின்றன என்று எவராலும் எண்ணிவிட முடியாது. எண்ணிக் கொண்டிருக்கும் பொழுதிலேயே எத்தனையோ ஜனனம் நிகழ்ந்து விடுமே!

'உயிர் வகைகள் இவ்வளவு' என ஞான சம்பந்த தேவாரத்தில் தெரிவிக்கிறார்.

'உரை சேரும் எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதம் நிரைசேரப் படைத்து' என்கிறார்.

வாத்து ஒன்று, கொக்கு இரண்டு, ஆடு மூன்று, மாடு நான்கு, கிளி ஐந்து, காகம் ஆறு என வகைகளை எண்ணினாலே இவ்வளவு இலட்சம் வருகிறது என்கிறார்கள்.

பல பிறவிகளுக்குப் பிறகு தான் மானுடதேகம் வாய்க்கிறது என்கிறது இந்து சமயம்.

'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி...
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்'

எனத் திருவாசகத்தில் மாணிக்க வாசகர் விளக்கமாகவே உரைக்கின்றார்.

அதாவது, பல பிறவிகளில் உழன்று தவித்த நான் தற்பொழுது மனிதனாகப் பிறந்ததினால் மகத்துவம் பெற்றேன் என்கிறார்.

'இப்பொழுது புரிகிறதல்லவா! குலுக்கலில் நாம் அனைவருமே கோடீஸ்வரர்கள் ஆகியிருக்கின்றோம் என்று. உயிரினங்களில் மனிதப் பிறப்பு எய்துவது அவ்வளவு எளிதானது அல்ல என ஆதி சங்கரரும் விவேக சூடாமணியில் 'ஜந்துனாம் நர ஜன்மம் துர்லபம்' எனப் பேசுகிறார்.

ஆடிக்கும் கொடிக்கும் ஓர் அறிவு. உடம்பினால் உற்று அறிவது. அதாவது தொட்டால் மட்டுமே தெரிந்து கொள்ளும். சங்கத்திற்கும் நத்தைக்கும் அவ்வறிவோடு நாக்கும் உண்டு.

கரையானுக்கும் எறும்புக்கும் மூன்றாவது அறிவாக மூக்கும் உண்டு. நண்டிற்கும் வண்டிற்கும் உடம்பு, நாக்கு, மூக்கு, கண் என நான்கு அறிவு. விலங்கு, பறவை களுக்கு செவியும் சேர ஐந்து அறிவு. மனிதர்களாகிய நமக்குத் தான் ஆறறிவு. உயிரியல் வல்லுநர்களும் மூக்கில் விரல் வைக்கும் வண்ணம் இப்படி மொழிவது எது தெரியுமா!

நம் செம்மொழித் தமிழின் 'தொல்காப்பியம்!'

ஆம்! மனிதன் மட்டுமே சாதிக்கப் பிறந்தவன். ஆனால், ஆறாவது அறிவு என்று இருப்பதையே பலர் அறியாமல் அல்லவா இருக்கிறார்கள்.

சாதிக்கப் பிறந்தவன் 'ஒரு சாதிக்குப் பிறந்தவனாக' அல்லவா குறுகிப் போகிறான்.

'மானுட சமுத்திரம் நான் என்று கூவு!' என்று மார் தட்டுகிறார் பாவேந்தர் பாரதி தாசன்.

உண்டும், உறங்கியும், குழந்தைகள் பெற்றும் வாழ்வது தான் வாழ்க்கை என்றால் விலங்குகளுக்கும் நமக்கும் வித்தியாசம் வேண்டாமா?

எப்படி நலமாக இருக்கிறீர்களா? எனப் பலரைக் கேட்டுப் பாருங்கள்.

'ஏதோ உங்க புண்ணியத்திலே இருக்கிறேன்' என்பார்கள். அவர்கள் புண்ணியமோ, நற்செயல்களோ செய்வதில்லை என்று முடிவு கட்டிவிட்டார்கள்'.

'ஒரு மாதிரி வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கு!' என்று பலர் வாழ்க்கையைத் தானாக ஓடும் ஒரு வண்டியாக அல்லவா பாவிக்கிறார்கள். வாழ்க்கை வாகனத்தின் ஸ்டியரிங் நம் கையில் தானே இருக்கிறது. அதன் பிரேக் நம் சூலின் கீழ்தானே இருக்கிறது.

தொடரும்...

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2054

விஜயந்தினி




அஜந்தா




சிவாஸ்கர்




தரசுதா




அபிசுயா





யாதவன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# நல்லன எல்லாம் தரவல்ல நயினை நாகபூஷணி



"அகிலாண்ட கோடியீன்ற அன்னையாய் பின்னையும் கன்னியென" மறைகளிலே போற்றப்படுபவள் அன்னை ஆதிபராசக்தி.

"ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய் நின்றாள்" என அபிராமிப்பட்டர் தனது அபிராமி அபிராமி அந்தாதியில் குறிப்பிடுவதைப் போன்று பராசக்தியானவள், ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு பல்வேறு வடிவங்களையும் நாமங்களையும் தாங்கி இவ்வுலகெங்கும் வியாபித்துள்ளாள். இவ்வாறு அன்னை, ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு விரும்பி உறைந்த இடங்கள் சக்தி பீடங்கள் எனப் போற்றப்படுகின்றன.

இவற்றில் மணித்தீவில் இந்திரனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட புவனேஸ்வரி பீடத்திலே "நாகபூஷணி" என்ற நாமத்துடன் அம்பிகை நயினாதீவிலே அமர்ந்து அருள்புரிகின்றாள்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே நயினாதீவு ஓர் வழிபாட்டிற்குரிய இடமாக விளங்கிவந்துள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காவிய காலச் செட்டிமார்கள் இத்தீவில் வழிபாடாற்றியுள்ளார்கள் என்பதும் ஆதியில் அவர்களாலேயே அம்பிகைக்கு ஆலயம் அமைக்கப்பட்டது என்பதும் வரலாறு.

செட்டிமார்களின் வழிவந்த வீராசாமி செட்டியார் என்ற பெரும்வணிகர், "அண்டகோடிகளையெல்லாம் ஒரு தலையில் நீ சுமந்தருளுவதாலல்லவோ... எனத் தொடங்கி தொண்டர்கள் நிறைந்திடும் இலங்கை நயினாதீவு துதி செய்யும்படி அமர்ந்தோய்" என அம்பாளைப் போற்றிப் பாடியுள்ளார்.

யோகிகள், ஞானிகள், தேவர்கள், அரசர்கள் மற்றும் சாதாரண மனிதர்கள் என அனைவராலும் வழிபடப் பெற்ற சிறப்புமிகு தலமாக விளங்கும் இவ் ஆலயத்தின் பழம் பெருமைக்கு அசைக்க முடியாத சான்றாக அமைவது, ஆலயக் கருவறையில் சுயம்பு மூர்த்தமாக உருப்பெற்றிருக்கும் மூல விக்கிரகமே. அம்பிகையின் ஆலய மூல விக்கிரகம் பல்லாயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்தது என்பது அதனை ஆய்வு செய்த பலரது ஏகோபித்த கருத்தாக உள்ளதைக் காண முடிகின்றது.

"சரித்திர காலத்திற்கு முற்பட்ட நாகவழிபாட்டுடன் பின்னிப் பிணைந்ததாக இவ்விக்கிரகம் தோற்றம் பெற்றிருப்பதாகவும் அதன் அமைப்பைப் பார்க்கின்ற போது அது பல ஆயிரம் வருடங்கள் முந்தியதாகப்படுகிறது" என தென்னிந்தியாவின் காரைக்குடியைச் சேர்ந்த செல்லக்கண்ணு ஸ்தபதியார் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இந்தியாவின் பிரபலமான தொல்பொருள் ஆய்வாளரும் சிற்ப சாஸ்திர நிபுணருமாகிய கலாநிதி எம். நரசிம்மன் அவர்கள் ஈழத்திலே உள்ள சக்தி ஆலயங்களில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றிலும் கீர்த்தி பெற்றுத் திகழும் தலங்களுள் சிறப்புடையது நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம். அம்பாளின் வருடாந்த மஹோற்சவம் ஆனி மாதப் பௌர்ணமி தினத்தை தீர்த்த நாளாகக் கொண்டு அதன் முன்பாக வரும் பிரதமைத் திதியில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 16 தினங்கள் நடைபெறும். இவ் உற்சவங்கள் ஒவ்வொன்றும் சிறப்புப் பொருந்தியவை.

"கைத்தலங்கள் இருபதுடை அரக்கர்கோமான்" இராவணன் கைலாய மலையை தூக்குவதற்கு முன்னைய, அஞ்சிய அம்பிகை தனது நாயகரை அணைத்தபடி எழுந்தருளும் ஏழாம் நாள் இரவுக் கைலைக் காட்சியும் அம்பிகை தனது மைந்தர்களுடன் திருமஞ்சத்தில் ஏறி

" சிந்தையில் உனை இருத்தி தியானித்து நிற்போர்க்கெல்லாம்

முந்தைய வினையின் பாவம் முழுமையாய் அகற்றும் அன்னை

கந்தவர் குழலாள் நாகபூஷணி நயினை தீவில்

வந்தமர்ந்தருளப் பெற்று வழிபடப் பேறு பெற்றோம்"

ஓம் சக்தியே போற்றி

**நடராசா மயூரன்**
**அதிபர்,**
**நயினாதீவு-06.**

# கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு நிதியுதவி

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ்தொற்று நோய் காரணமாக, விடுமுறை வழங்கப்பட்டுள்ள பாடசாலைகளை மீளத் திறக்கும் திட்டத்தின் கீழ், கிழக்கு மாகாணப் பாடசாலைகளைத் தயார்படுத்தும் பொருட்டு, கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம், பாடசாலைகளுக்கு நிதி வழங்கியுள்ளது.

இந்நிதிகளைப் பயன்படுத்துவது தொடர்பில், கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.கே.எம்.மன்சூர், வலயக் கல்விப் பணிப்பாளர்களை அறிவுறுத்தியுள்ளார். பாடசாலைகளுக்கான இந்த நிதிகள், சம்பந்தப்பட்ட 17 வலயக் கல்வி அலுவலகங்களினூடாக, கிழக்கு மாகாண பாடசாலைகளின் வங்கிக் கணக்குக்கு தனித்தனியாக வைப்பிலிடப்பட்டுள்ளன.

இதனால், கிழக்கு மாகாணத்திலுள்ள சுமார் 457 ஆரம்பப் பாடசாலைகளும், 657 இரண்டாந்தரப் பாடசாலைகளும் நன்மையடைந்துள்ளன. பாடசாலைகளுக்கு தலா ஆயிரத்து 250 ரூபாய் முதல் 16 ஆயிரம் ரூபாய் வரை நிதிகள் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளைத் தயார்படுத்துவது தொடர்பில், கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபம், வழிகாட்டல், ஆலோசனைகளுக்கு அமைய, நீர், கைகழுவும் திரவம், ஏனைய சுகாதாரத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக குறித்த நிதிகள் பயன்படுத்தப்படவுள்ளன எனவும் பாடசாலைச் சூழல் தொற்று நீக்கம் செய்யப்பட வேண்டுமெனவும் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.கே.எம்.மன்சூர் தெரிவித்தார். (ஐ-8)




## 'கொடியேற்றி கொடிய கொரோனாவை போக்கிடு தாயே'

"அலை கடல் நடுவிலே வீற்றிருந்து எல்லையில்லா
அருள் பாலிக்கும் நாகபூஷணித் தாயே
உலகெங்கும் உயிர் பறிக்கும் கொடிய கொரோனாவால்
உந்தன் உயர் திருவிழாவிற்கும் கட்டுப்பாடுகள் பல -தாயே
ஊர் பிறந்தவர்கள் கூட உபவாசம் இருந்தாலும்
உம்மை வந்து தரிசிக்க தடைகள் பலபல தாயே
நித்திய அமுதளிக்கும் உந்தன் ஆலயத்தில்
அமுதளிக்க உமக்கும் தடை
அமுதசுரபி அன்னதான சபைக்கும் தடை தாயே
உந்தன் பிள்ளைகள் நாங்கள் எம் குறைதனை
தாயிடம் கூறாமல் யாரிடம் கூறுவது தாயே
உந்தன் கடைக்கண் பார்வையை-ஒருமுறை
உலகிற்குக் காட்டுவாயா? தாயே
இனியும் எம் மக்களை அல்லல்பட விடாதே தாயே
கொடியேற்றி கொடிய கொரோனாவை போக்கிடு தாயே"

**நயினை விசு இராசநாயகம்.**

## நயினை நாகபூஷணி அம்மன்

காரிருள் அகற்றி கதிரொளி கொடுத்து
காதலாய் கனக்கும்கண்ணகி இவள்
சோகங்கள் தவித்து சோதனை அகற்றி
சோர்வுகள் போக்கும் சோதியும் இவள்
ஆசைகள் தவிர்த்து ஆணவம் துரத்தி
அணைத்திட செய்யும் அன்னை இவள்
வீரங்கள் செறிந்து விரயங்கள் தவிர்த்து
விண் வீற்றிருக்கும் வியாபகம் இவள்
காலங்கள் கடந்தும் கருணைகள் செறிந்து
காக்கும் ஓர் தெய்வமாய் கலைவாணி இவளே

**ப்ரியா காசிநாதன்**

## வரமழை பொழியும் தாயே!

நயினை மண்ணை ஆளும் தாயே
எங்கள் துயரினைத் தீர்ப்பவள் நீயல்லவா
நம் தீவினைகளை விரட்டும் தாயே
எங்கள் பாவங்களைப்
போக்குபவள் நீயல்லவா

**சுப்பிரமணியம் ஜெயரூபன்,**
**பருத்தித்துறை.**

## நயினை அம்மன்

நயினைத்தாயேநலம் தரும் தேவி
நம்மைக்காத்திடும் பூஷணித்தாயே
கடல் அலைஎழுந்து இசைபாட
காற்றொலிகீதம் உனைப்புகழ
அடியவர் அரோகரா எனவாழ்த்த
அனைவரும் உன்புகழ் தனைப்பாட
வேதியர் ஆகம இசைபொழிய
வேண்டுவார் குறைகளைநீபோக்க
நாககன்னியர் குடைபரப்பி
நாவினில் நின்புகழ் பாடிவர
காவடித்தாளம் தாம்,தீ என
கன்னியர் தாமும் கைதொழுதேத்த
இமையவர் தாமும் பூமாரிபொழிய
நயினையில் வீற்றிருக்கும் தாயேவருக

**நா. சண்முகரத்தினம் (ஜே.பி),புத்தூர்.**

மத்திய வங்கி அதிகாரிகளை எச்சரித்த ஜனாதிபதி

# பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு கொள்கை ரீதியிலான திட்டங்களே அவசியம்

## மிரட்டல்கள் இல்லை என்கிறார் வேலுகுமார்

(கொழும்பு)

**மத்திய வங்கி அதிகாரிகளை அழைத்து மிரட்டுவதை விடுத்து பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு கொள்கை ரீதியிலான திட்டங்களை ஜனாதிபதி வகுக்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட வேட்பாளருமான வேலுகுமார் வேண்டுகோள் விடுத்தார்.**



சமகால அரசியல் நிலைமை தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் நிதி அமைச்சர் ஒருவர் இருக்கிறார். அவ்வமைச்சுக்கு செயலாளர் ஒருவர் இருக்கின்றார். வங்கிகளின் வங்கியாகக் கருதப்படுகின்ற மத்திய வங்கிக்கு ஆளுநர் ஒருவரும் இருக்கின்றார்.

இவர்கள் மூவருமே பிரதானமாக பொறுப்புக்கூறவேண்டியவர்கள். இவர்களுக்கான நியமனத்தை ஜனாதிபதியே வழங்கினார். எனவே, இவர்களை விடுத்து மத்திய வங்கி அதிகாரிகளை அழைத்து , பிரசாரத்துக்காக அவர்களை மிரட்டுவது ஜனாதிபதியொருவர் செய்யக்கூடி பணி அல்ல.

அமைச்சரவையில் இவ்வாறு பொங்கியெழுந்து நிதி அமைச்சரிடம் ஜனாதிபதி தனது விசனத்தை வெளியிட்டிருந்தால் அதனை வரவேற்றிருக்கலாம்.

ஆனால், அரசாங்க அதிகாரிகளை இவ்வாறு மிரட்டுவது தவறான முன்னுதாரணத்தை வழங்கும் செயலாகும். ஜனாதிபதியாக இருந்தாலும் அரசியலமைப்பின் பிரகாரமே செயற்பட வேண்டும்.

நிதி அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே இருக்கின்றது. இந்நிலையில் ஜனாதிபதியின் அச்சுறுத்தலுக்கு அஞ்சி அரச அதிகாரிகள் தவறான முடிவுகளை எடுத்தால், நாடாளுமன்றம் இல்லாத நிலையில் பொறுப்புக்கூற வேண்டியது யார்?

எனவே, மிரட்டல்கள், எச்சரிக்கைகள் அல்ல, கொள்கை ரீதியிலான திட்டங்களே அவசியம். எட்டு மாதங்கள் ஆகியும் ஜனாதிபதி இதனை உரிய வகையில் செய்ததாக தெரியவில்லை. இராணுவ அதிகாரிகளை நியமித்து செயலணிகளை அமைத்தால் மட்டும் பிரச்சினைகள் தீர்ந்துவிடாது" என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# சனிக்கிழமைகளில் தபால் அலுவலகங்கள் திறப்பு; சம்பளத்தில் 20 சதவீதக் குறைப்பு செய்யப்படும்

## பந்துல தகவல்

(கொழும்பு)

தபால் அலுவலகங்கள் சனிக்கிழமைகளில் திறக்கப்பட்டாலும், அன்றைய தினம் மாத்திரம் தமது சம்பளத்தில் 20 சதவீதக் குறைப்பை செய்து 80 வீத சம்பளத்தை வழங்க தீர்மானித்துள்ளதாக அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்கான ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தபால் அலுவலகங்கள் சனிக்கிழமைகளில் திறக்கப்பட்டால் அதன் ஊழியர்களுக்கு அன்றையதினம் மாத்திரம் 80 சதவீத சம்பளத்தை வழங்குவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலையடுத்து ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக தபால் திணைக்களத்தை நடத்திச் செல்வதிலும் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில், தபால்சேவை ஊழியர்களின் ஊதியத்தில் குறைப்பைச் செய்ய வேண்டிய நிலையேற்பட்டிருக்கிறது. எனவே, இந்நெருக்கடி நிலையை எதிர்கொள்வதற்காக சனிக்கிழமைகளில் தபால் அலுவலகங்களை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டாலும், அதனைத் தபால்சேவை ஊழியர்கள் தொழிற்சங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

எனினும் தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடல்களின் அடிப்படையில் சனிக்கிழமை தபால் அலுவலகங்களைத் திறக்கலாம் எனவும், அன்றைய தினம் மாத்திரம் தமது சம்பளத்தில் 20 சதவீதக் குறைப்பைச் செய்யுமாறும் தொழிற்சங்கம் ஓர் உடன்பாட்டிற்கு வந்திருக்கிறது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நமது நிழல்!

ஒரு ஆள் இருந்தான். கொஞ்சம் வசதியான ஆள்தான். அவனுக்கு தாராள மனசு. அடுத்தவர்களுக்கு அவ்வப்போது தன்னால் முடிந்த உதவி ஏதாவது செய்வான். ஆனால் அவனுடைய மனைவிக்கு நேர் மாறான குணம். மகா கஞ்சத்தனம் மிக்கவர். அதுமட்டுமில்லை தன்னுடைய கணவனை ஏழைகளுக்கு உதவி செய்ய விடுவதில்லை.

அந்த ஆள் மற்றவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்று நினைத்தால் கூட தன்னுடைய மனைவிக்குத் தெரியாமல் செய்தால் தான் உண்டு.

என்ன செய்கிறது? இப்படி ஒரு கணவன்–மனைவி. ஒருசமயம் அந்த அம்மா பிறந்த வீட்டுக்குப் போக வேண்டியிருந்தது.

நடந்தே போகலாம் என்று சொல்லி விட்டார் அந்த அம்மா. அது கடுமையான கோடைகாலம். சரியான வெயில். அந்த உச்சி வெயிலிலே இரண்டு பேரும் நடந்தே புறப்பட்டார்கள்.

அந்த அம்மா காலிலே செருப்புக்கூட மாட்டிக்கொள்ளவில்லை. வெறும் காலோடு நடக்க ஆரம்பித்து விட்டார். செருப்பு போட்டுக் கொண்டால் அது வேறு தேய்ந்து போய்விடும் அல்லவா. பக்கத்திலே நிழல் தரக் கூடிய மரம் எதுவுமே இல்லை. காலிலே சூடு தாங்கவில்லை. கடுமையான வெப்பம்.

“கால் சுடுகிறதே என்ன செய்கிறது” என்றார் அந்த அம்மா. மனைவி தவிக்கிறதைப் பார்த்தான் கணவன். ‘‘ஏன் இப்படித் தவிக்கிறாய்? உனக்குத்தான் உடம்பு ரொம்ப பெரிதாச்சே. உன் உடம்பினுடைய நிழல் பூமியிலே விழும் அல்லவா அந்த நிழல் மேலே கொஞ்ச நேரம் நின்று உன்னுடைய கால் சூட்டை தவிர்க்கலாமே’’ என்று யோசனை சொன்னான்.

அந்த அம்மாவுக்கு கோபம் வந்து விட்டது. “என்ன உளறுகிறீர்கள்? என்னுடைய நிழல் மேலே நானே எப்படி நிற்க முடியும்” என்றார்.

இப்ப அந்தக் கணவன் சொன்னானாம்...“இப்ப கொஞ்சம் சிந்தித்துப் பார்...உன்னுடைய நிழலே உனக்கு உதவ முடியவில்லை...நீ பெட்டியிலே பூட்டி வைத்திருக்கின்ற பணமா உனக்கு பிற்காலத்திலே உதவப் போகிறது?’’ என்றான்.

அந்த அம்மாவுக்கு புத்தியிலே ஒரு தெளிவு உண்டாகிவிட்டதாம். மகான்களுக்கெல்லாம் மரத்தின் நிழலிலே ஞானம் வருகிறது. இந்த அம்மாவுக்கு உச்சி வெயிலிலே ஞானம் வந்திருக்கிறது. வாரியார் சுவாமியிடம் கேட்ட கதை இது. இதைக்கேட்டதும் நமக்கு இன்னொரு கதை ஞாபகத்திற்கு வந்தது.

ஒரு பெரிய செல்வந்தன்... நிறையச் சொத்து...அவன் படு கஞ்சன். பணம் சேர்க்கத் தெரியுமே தவிர செலவு செய்யத் தெரியாது. அவனுக்கு மூன்று பிள்ளைகள். அந்த மூன்று பேரும் தன்னைப் போலவே கஞ்சல் தனமாக இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். அவனுக்கு கடைசிக் காலம் நெருங்கிவிட்டது. சாகக் கிடக்கின்றான். மூத்த பிள்ளையைக் கூப்பிட்டான்.

“நான் செத்துப் போனால் நீ என்னை எப்படி அடக்கம் செய்வாய்?’’ என்று கேட்டான்.

‘‘உனக்கு சந்தனப் பலகையால் ஒரு பெட்டி செய்வேன். அதிலே உன்னை வைத்து பட்டுத் துணியால் மூடி கௌரவமாகக் கொண்டு போய் அடக்கம் செய்வேன்’’ என்றான் அவன்.

அப்பா பளாரென்று அறைந்து விட்டார் அவனை. ‘‘என்னுடைய பிள்ளையாடா நீ...சந்தன மரமும் பட்டுத் துணியும் எவ்வளவு செலவாகும்...ஊதாரியாகப் போய்விடுவாய் போல இருக்கு’’ என்றார்.

இரண்டாவது பிள்ளையைக் கூப்பிட்டு அதே கேள்வியைக் கேட்டார். அண்ணன் அறை வாங்கியதைப் பார்த்து விட்டதால்... ஜாக்கிரதையாகப் பதில் கூறினான்.

“நான் உனக்கு கள்ளிப் பலகையாலேதானப்பா பெட்டி செய்வேன். துணி எதுவும் போர்த்த மாட்டேன்...கொண்டு போய் அடக்கம் செய்துவிடுவேன்’’ என்று சொன்னான்.

அவனையும் பளாரென்று அடித்தார். “கள்ளிப் பலகை மட்டும் என்ன சும்மாவாகவா கிடைக்கும்’’ காசு கொடுத்தால்தானே கிடைக்கும் என்று சொன்னான். கடைசியாக மூன்றாவது மகனைக் கூப்பிட்டான்.

நீ எப்படியடா என்னை அடக்கம் செய்வாய்? என்றார். “நான் உனக்காக செலவே செய்ய மாட்டேன். உன்னை வைத்து பிழைத்துக் கொள்வேன்’’ என்று சொன்னான்.

எப்படியடா அதுவென்று கேட்டார். ‘‘உன்னைத் துண்டுதுண்டாக வெட்டி ஒரு கூடையிலே போட்டு தலையிலே தூக்கிக்கொண்டு தெருத் தெருவாகப் போவேன். ஆட்டுக்கறி என்று சொல்லி விற்றுக் காசாக்கி விடுவேன்’’ என்று சென்னான். “நீதான் என் பிள்ளை! அப்படியே விற்று காசாக்கிவிடு...ஆனால் மேலத்தெரு பக்கம் மட்டும் போகாதே!’’ என்று சொன்னான்.

ஏனப்பா? என்று கேட்டான் மூன்றாமவன். “அங்கே இருக்கிறவர்கள் எல்லாரும் கடனுக்குக் கேட்பார்கள். கையிலே காசு தரமாட்டார்கள்!’’ என்று கூறினார்.

உண்மையாக நாணயமாக நடப்பவனுக்கு மக்கள் நெஞ்சத்தில் ஓர் சிறந்த இடம் உண்டு.

~ தந்தை பெரியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிங்கள ஆட்சியாளர்கள் எவரும் எங்களுக்கு உரிமை தரார்

தமிழ் மக்களை தமிழ் அரசியல்வாதிகளோடு சேர்ந்து சிங்கள ஆட்சியாளர்களும் சிங்கள அரசியல்வாதிகளும் ஏமாற்றத் தலைப்பட்டுள்ளனர்.

இதிலிருந்து தமிழ் மக்கள் தப்பிச் செல்வதற்கு இறைவன்தான் உதவி செய்ய வேண்டும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் முழுவாக்குகளையும் பெற்றுக் கொண்ட சஜித் பிரேமதாஸ தனக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு நன்றிகூடக் கூறவில்லை.

தவிர, போர்க்குற்றம் புரிந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு அமெரிக்கா தடை விதித்தபோது, அதனைக் கண்டித்து அறிக்கை விட்டவர் சஜித் பிரேமதாஸ என்பதை நாம் எவரும் மறந்து விடவில்லை.

தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவுக்கு அளித்த வாக்குகளின் மை காய முன்னதாகவே தமிழ் மக்களை மறந்து இராணுவத் தளபதிக்காக அமெரிக்காவைக் கடிந்தவர் சஜித் பிரேமதாஸ என்றால்,

அவருக்கு வாக்களியுங்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியது எனில், தமிழ் மக்கள் எப்படியெல்லாம் ஏமாற்றப்படுகிறார்கள் என்பது புரிதற்குரியது.

இது மட்டுமா? என்றால் இல்லை. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களை ஏமாற்றிய கொடுமை சொல்லுந்தரமன்று.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவோடு ஆட்சி நடத்திய ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களுக்கு எந்த உரிமையும் கிடைக்கக்கூடாது என்பதற்காக ஜனாதிபதியாக இருந்த மைத்திரியை தமிழ் மக்களோடு பகை கொள்ள வைத்தார்.

இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டார்.

இதற்கு மேலாக, வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்த சி.வி.விக்னேஸ்வரன் தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கின்றார் என்பதற்காக அவருடன் கதைக்க மாட்டேன். அவரை மதிக்க மாட்டேன் என்றும் ரணில் விக்கிரமசிங்க கருத்துரைத்திருந்தார்.

இவ்வாறு மைத்திரிபால சிறிசேனவுடன் பகையை ஏற்படுத்தி ஆட்சிப்பீடத்தில் ஒரு சுமுகமான சூழ்நிலையை குழப்பியதோடு இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற பெயரில் அரசியலமைப்புச் சீர்திருத்தம் என்ற மாயையை ஏற்படுத்திக் காலத்தைக் கடத்தினார்.

ஒரு ஆனந்தசுதாகரனைக் கூட விடுதலை செய்ய முடியாத ரணில் விக்கிரமசிங்க இப்போது; நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களின் உரிமையை வழங்குவோம் எனக் கூறுவது ஏமாற்றுத் துரோகத்தின் உச்சக் கட்டம் எனலாம்.

# சிறைச்சாலைகள் மீது பொதுமக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்-சட்டமா அதிபர்

(கொழும்பு)

சிறைச்சாலைகள் மீது பொதுமக்கள் நம்பிக்கை இழந்துள்ளதாக சட்டமா அதிபர் டப்புல டி லிவெரா தெரிவித்துள்ளார்.

கொழும்பு சிறைச்சாலைக்கு சட்டமா அதிபர் டப்புல டி லிவேரா நேற்று விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இந்த விஜயத்தின் போது சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துசார உபுல்தெனிய மற்றும் சட்டமா அதிபர் டப்புல டி லிவேரா ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

குறித்த சந்திப்பின் போதே சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துசார உபுல்தெனியவிடம் சட்டமா அதிபர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் சிறைச்சாலைகளில் ஏற் பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சட்டமா அதிபரிடம் தெளிவுபடுத்தியுள்ளதாகவும் குற்றங்கள் இடம்பெறும் இடமாக தற்போது சிறைச்சாலைகள் மாறியுள்ளதாகவும், சிறைச்சாலைகளுக்குள் குற்றவாளி குழுக்கள் செயற்படுவதாகவும் சட்டமா அதிபர் இதன போது சுட்டிக்காட்டினார். (ஐ-8)

# உள்ளூர் வங்கிகளிடம் கடன் நிதி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

உள்ளூர் வங்கிகள், உள்நாட்டில் இயங்கும் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடம் இருந்து 500 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியினை கடன் பெறுவதற்கு நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் கடன் தொகை 2020 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் அன்றாட நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட வங்கிகள் நிதி நிறுவனங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு முன்பாக தங்களது திட்டங்களை சமர்ப்பிக்க வேணடும்.

இவ்வாறு திட்டங்களை முன்வைக்கும் தரப்பினரிடம் இருந்து தலா 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியினை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பெற்றுக் கொளளப்படும் கடன் தொகையானது ஒரு தடவையில் அல்லது தவணை முறையில் செலுத்தப்படும் எனவும் நிதியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-8)

# தனிமைப்படுத்தலிலிருந்து 153 பேர் வீடுகளுக்கு

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த மேலும் 153 பேர் நேற்று வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அத்துடன், இரணைமடுவில் அமைந்துள்ள இலங்கை கடற்படை தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த 71 கடற்படை அதிகாரிகள் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்துகொண்டு நேற்று வெளியேறினர்.

இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ள கடற்படை அதிகாரிகள் அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு அவரகளுக்கு கொரோனா வைரஸ் தொற்றில்லை என்பது உறுதி செய்யப்பட்ட பின்னரே வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவ்வாறு, வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரும் 14 நாட்களுக்கு சுய தனிமைப்படுத்தலில் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-8)

## குணமடைந்தோர் 1446

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் 25 பேர் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

இதன்படி, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 446 ஆக காணப்படுகின்றது. இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களில் 756 கடற்படை அதிகாரிகள் உள்ளடங்குவதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்நிலையில் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 947 ஆக காணப்படுகின்றது. (ஐ-8)

## பேருந்துகளின் தகவல்களை அறிய புதிய செயலி அறிமுகம்

(கொழும்பு)

பேருந்தில் பயணிக்கும் பயணிகளின் நலன் கருதி அடுத்த வாரம் முதல புதிய செயலியொன்றை அறிமுகப்படுத்த தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்மூலம் குறித்த பேருந்து வரும் நேரம், குறித்த பேருந்து தற்போதுள்ள இடம் ஆகியவற்றை அறிந்து கொள்ள முடியும் என மேலும் தெரிவித்துள்ளது. (ஐ-8)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**மன்னார் பிரதேசத்தில்** மாலுவாடி, **New Silk Road Aquatic Company PVT (Ltd)** ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ மனித உடல்தான் உலகத்திலேயே மிகச்சிறந்த உடலாகும். மனிதனே மேலான ஜீவன். எல்லா மிருகங்களையும் தேவர்களையும் காட்டிலும் உயர்ந்தவன். இந்தப் பிறவியை நாம் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

❖ உனக்குள் இருக்கும் ஆற்றல் மக்களுக்கு பயன்படும் வகையில் அமைய வேண்டும். வேறு எவரும் உனக்கு கற்பிக்கவும் முடியாது. ஆன்மிகவாதி ஆகிவிடவும் முடியாது. உன்து சொந்த ஆன்மாவைத் தவிர வேறு ஆசிரியர் யாருமில்லை.

❖ எதை விதைத்தோமோ அதைத்தான் அறுவடை செய்கிறோம். நமது விதியை நாமே வகுத்துக் கொள்கிறோம். எனவே நல்லதையே விதைக்க கற்றுக்கொள்வோம்.

❖ காற்றை பயன்படுத்தி செல்லும் பாய்மரப் படகு போல, தகுந்த சந்தர்ப்பம் வரும்போது அதை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

# கொரோனாவால் இறந்தவர்களின் உடல் எனக் கூறி சவப்பெட்டிக்குள் போதைப்பொருள் கடத்திய ஆசாமி

(றியோடி ஜெனிரோ)

பிரேஸில்நாட்டில்கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களை கொண்டு செல்வதாகக் கூறி சவப் பெட்டிக்குள் போதைப் பொருள்களை காரில் கடத்திச் சென்ற நபரை பொலிஸார்கைதுசெய்துள்ளனர்.

உலகளவில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு அதிகஉயிரிழப்புக்களை சந்தித்து வரும் நாடு பிரேஸில்.

தற்போது வரை அந்த நாட்டில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு 47 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். தினமும் சராசரியாக ஆயிரம் பேர் வரை



வைரஸால் மரணமடைகின்றனர்.

இந் நிலையில், அந் நாட்டில் கொரோனாவால் பலியானவர்களின் உடல்களைக் கொண்டு செல்வதாகக் கூறி சவப் பெட்டிக்குள் போதைப் பொருட்கள் கடத்திய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பிரேஸிலில் மடோக்ராஹோ டிசுலா மாகாணத்தில் பொன்டா போரா என்ற பகுதியில் பொலிஸார் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது அவ் வழியாக வந்த காரை மறித்தனர்.

அந்தக் காரின் சாரதி தான் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களை வைத்தியசாலையில் இருந்து உறவினர்களிடம் ஒப்படைக்கும் தனியார் அமைப்பில் வேலை செய்து வருவதாக தெரிவித்தார்.

தற்போது கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களைக் கொண்டு செல்வதாகத் தெரிவித்தார்.

அப்பொழுது அந்த நபரிடம் தனது அடையாள அட்டையைக் காட்டும்படியும் உயிரிழந்தவர்களின் விபரங்களைக்காட்டும்படியும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனால் காரின் சாரதி முன்னுக்குப் பின் முரணாகத் தகவல்களைத் தெரிவித்தார்.

இதனால் சந்தேகமடைந்த பொலிஸார் காரில் இருந்த 2 சவப் பெட்டிகளையும் திறந்து பார்த்தனர்.

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்கள் இருக்கும் என எண்ணி பொலிஸார் அந்த இரண்டு சவப் பெட்டிகளிலும் சுமார் 290 கிலோ அளவுக்குப் போதைப் பொருட்கள் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

இதையடுத்து கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களைக் கொண்டு செல்வதாகக் கூறி காரில் போதைப் பொருட்கள் கடத்திய கார் சாரதியை கைது செய்தனர்.

கொரோனா காலத்திலும் வைரஸிற்கு பலியானவரைக் கொண்டு செல்வதாகக் கூறி சவப் பெட்டிக்குள் போதைப் பொருட்களை கடத்திய சம்பவம் பிரேஸிலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (2)

# மசூதிக்குள் பதுங்கிய பயங்கரவாதிகள் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக்கொலை



(ஸ்ரீநகர்)

ஜம்மு-காஷ்மீரில் மசூதிக்குள் பதுங்கிய 2 பயங்கரவாதிகள் உள்ளிட்ட 3 பயங்கரவாதிகளை பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றனர்.

ஜம்மு-காஷ்மீரின் புல்வாமா மாவட்டம், பாம்போர் அருகே உள்ள மீஜ் கிராமத்தில் பயங்கரவாதிகள் பதுங்கியுள்ளதாக பாதுகாப்பு படையினருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து நேற்று முன்தினம் பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிஸார் அங்கு விரைந்து சென்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது பாதுகாப்பு படையினரை கண்டதும் அங்கு பதுங்கி இருந்த பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

அவர்களது தாக்குதலுக்கு பாதுகாப்பு படையினரும் தகுந்த பதிலடி கொடுத்தனர். இதில் ஒரு பயங்கரவாதி முதலில் சுட்டுக்கொல்லப்பட்டான். 2 பயங்கரவாதிகள் மசூதிக்குள் பதுங்கினர். பாதுகாப்பு படையினர் மசூதியை சுற்றிவளைத்தனர். இரவு முழுவதும் மசூதியை விட்டு பயங்கரவாதிகள் வெளியே வரவில்லை.

வழிபாட்டு தலத்தின் புனித் தன்மையை பாதுகாக்கும் வகையில் பாதுகாப்புப் படையினர் உள்ளே சென்று தாக்குதல் நடத்தவில்லை. நேற்று அதிகாலையில் மசூதிக்குள் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசினர். இதனால் பயங்கரவாதிகள் வெளியேறினர்.

இதையடுத்து அவர்கள் இருவரையும் பாதுகாப்பு படையினர் சுட்டுக்கொன்றனர். பயங்கரவாதிகள் பயன்படுத்திய துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டதுடன் தொடர்ந்து அப்பகுதியில் தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது. (2)

# அவுஸ்திரேலியா மீது சைபர் தாக்குதல் அரசின் முக்கிய ஆவணங்களை திருட முயற்சி

(சிட்னி)

அவுஸ்திரேலிய அரசு மற்றும் தனியார் துறைகள் மீது மிகப்பெரிய அளவில் சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு பிரதமர் ஸ்காட் மோரிசன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் அரசு மற்றும் தனியார் துறையின் கணனி அமைப்பின் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதல் மிகப்பெரிய அளவில் நடத்தப்பட்டுள்ளது. இது எப்போது தொடங்கியது என்ற தகவல் வெளியாகவில்லை.

அவுஸ்திரேலிய அரசு மற்றும் தனியார் துறைகளின் முக்கிய தகவல்கள் திருடப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியாரின் இணையத்தள பக்கங்களுக்குள் நுழைந்துள்ள ஹேக்கர்கள் முக்கியமான உள்கட்டமைப்பு, அரசின் திட்டங்கள், கொள்கை முடிவுகள், முதலீடு போன்றவை தொடர்பான பல்வேறு தகவல்களைத் திருடி இருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளது.

தற்போதுவரை சைபர் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டு தான் உள்ளதாகவும் அதை சரிசெய்ய தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அந்நாட்டு பிரதமர் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த சைபர் தாக்குதலுக்கு ஒரு நாடு பின்னணியில் இருப்பதாக குற்றஞ் சாட்டியுள்ளார்.

கொரோனா விவகாரத்தில் அவுஸ்திரேலியா-சீனா இடையே மோதல் நிலவி வருகின்றமை என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# இந்திய- சீன எல்லையில் பதற்றம் சர்ச்சையை ஏற்படுத்திய பதாகை

(பீஜிங்)

இந்திய-சீன எல்லையில் பதற்ற சூழல் ஏற்பட்டுள்ள நிலையில், சர்ச்சை வாசகம் அடங்கிய பதாகை சமூக வலைத் தளங்களில் வைரலாகி வருகிறது.

லடாக்கின் பாங்கோங் ஏரியை ஒட்டிய பகுதியில் Fight To Win எனும் வாசகம் அடங்கிய இந்திய இராணுவத்தின் பதாகைப் புகைப்படம் சமூக வலைத்தளங்களில், 'சீனா நிறுவிய எச்சரிக்கைப் புகைப்படம் சமூக' எனும் தலைப்பில் வைரலாகி வருகிறது.

முன்னதாக லடாக் எல்லை கல்வான் பள்ளத்தாக்கில் இந்தியா - சீன இராணுவ வீரர்கள் பயங்கரமாக மோதிக் கொண்டனர்.

இதில் இந்திய வீரர்கள் 20 பேர் வீர மரணம் அடைந்தனர். சீனா தரப்பில் 40இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு மற்றும் காயம் அடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக இரு நாட்டு எல்லை பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் பதாகையின் புகைப்படம், 'லடாக்கில் சீனா நிறுவிய பதாகை, மோடிக்கு தெளிவான தகவல்' எனும் தலைப்பில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# தொடர்ச்சியாக உண்ணாவிரதம் முருகன் கவலைக்கிடம்

(வேலூர்)

சிறையில் 18 ஆவது நாளாக உண்ணாவிரதத்தை தொடர்ந்த முருகனின் உடல் நிலை திடீரென சோர்வடைந்தது. அதையடுத்து வைத்தியர்கள் உடனடியாக அவருக்கு குளுக்கோஸ் ஏற்றினர்.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் முருகன் வேலூர் ஆண்கள் சிறையிலும் அவரது மனைவி நளினி பெண்கள் சிறையில் தனி அறையிலும் அடைக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக வேலூர் ஆண்கள், பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகள் தங்களின் குடும்பத்தினர், உறவினர்களிடம் கைத்தொலைபேசியில் காணொளி மூலம் பேசி வருகிறார்கள். முருகன் தனது மனைவி மற்றும் உறவினர்களிடம் காணொளி மூலம் பேச சிறைத்துறை நிர்வாகம் அனுமதி அளிக்கவில்லை.

அதனால் மனவேதனை அடைந்த முருகன் ஜீவசமாதி அடைய வேண்டி கடந்த 1 ஆம் திகதி முதல் உண்ணாவிரதம் இருந்து வருகிறார். யாருடனும் பேசாமல் தியான நிலையில் இருக்கும் முருகனின் உடல் நிலையை வைத்தியர்கள் தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள்.

நேற்று 18 ஆவது நாளாக உண்ணாவிரதத்தை தொடர்ந்த முருகனின் உடல்நிலை திடீரென சோர்வடைந்தது. அதையடுத்து வைத்தியர்கள் உடனடியாக அவருக்கு குளுக்கோஸ் ஏற்றினர். உண்ணாவிரதத்தை கைவிடும்படி பலமுறை கோரிக்கை விடுத்தும் அவர் அதனை ஏற்கவில்லை என்று சிறை அதிகாரிகள் தெரிவித்தனர். (2)

## வாள்வெட்டுக்கு...

தாவது.

வாள்வெட்டுக்காக 7 மோட்டார் சைக்கிள்களில் வந்தவர்களை இராணுவம் யாழ்.நாயன்மார்கட்டுப் பகுதியில் வழிமறித்துள்ளது.

இதன்போது ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மட்டுமே சிக்கியுள்ளனர். ஏனையவர்கள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

க்கைது செய்யப்பட்ட இருவரும், அவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட வாளும் விசேட அதிரடிப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ் நகர் மற்றும் கல்வியங்காட்டுப் பகுதியைச் சேர்ந்தவர்களே இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.(ம-3,32,114)

## யாழ்.தேர்தல்...

848 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என யாழ்ப்பாணம் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ் தெரிவித்தார்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வாக்காளர்கள் அனைவரும் ஒகஸ்ட் 5ஆம் திகதி வாக்களிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் கடந்த வருடம் 5 லட்சத்து 64 ஆயிரத்து 714 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

இந்நிலையில் இம்முறை 5 லட்சத்து 71 ஆயிரத்து 848 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வாக்காளர்களுக்கான வாக்காளர் அட்டைகள் எமக்கு கிடைக்கப்பெற்று உள்ளன. அவை தபால் திணைக்களத்தின் ஊடாக வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட உள்ளன.

வாக்காளர்கள் சுகாதார முறைகளைப் பின்பற்றி அழைப்பினை மேற்கொள்ள முடியும். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் வீட்டுக்கு வாக்கு கேட்டுச் செல்லும்போது சுகாதார முறைகளைப் பின்பற்ற வேண்டியது கட்டாயமானது என்றார். (ம-3)

## யாழைச் சேர்ந்த...

யாழைச் சேர்ந்த புலனாய்வு உத்தியோகத்தர் ஒருவர் விபரீத முடிவெடுத்ததில் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு கல்முனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய வடமராட்சி பகுதியைச் சேர்ந்த பொலிஸார் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மூத்தவிநாயகர் கோவிலடி, கரணவாயைச் சேர்ந்த கே.கமல்ராஜ் (வயது- 21) என்பவரே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,60)

## கொரோனா...

பிரதேச வைத்தியசாலையை வட மாகாண கொரோனா வைத்தியசாலையாக மாற்ற வேண்டாம் என்று பிரதேச மக்கள் சிலர் பிராந்திய சுகாதாரப் பணிமனைக்கு முன்னால் எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார்கள்.

கிளிநொச்சி அக்கராயன்குளம் பிரதேச வைத்தியசாலையை வட மாகாண கொரோனா வைத்தியசாலையாக மாற்ற வேண்டாம் என்று அண்மையில் 20 அமைப்புகள் இணைந்து கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனுக்கு மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

இதேபோன்று கடந்த திங்கட்கிழமை அக்கராயன்குளம் பிரதேச அமைப்புகளுக்கு வட மாகாண கொரோனா வைத்தியசாலையாக மாற்றம் தொடர்பான கலந்துரையாடலில் அதிகாரிகளுக்கு பிரதேச அமைப்புகள் தங்களது ஒருமித்த எதிர்ப்பினைத் தெரிவித்திருந்தன.

ஆனால் இதுவரைக்கும் எந்தப் பதிலும் கிடைக்கப் பெறாத காரணத்தினால் பிரதேச அமைப்புகள் நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3,316)

## மணல் அகழ்வுக்...

போராட்டம் நடத்தியிருந்தனர்.

இந்நிலையில் பொலிஸார் தலையிட்டதன் அடிப்படையில் 2 நாள் அவகாசம் வழங்கி மக்கள் போராட்டத்தை நிறுத்தியிருந்த நிலையில் அவகாசம் முடிந்ததை தொடர்ந்து நேற்றுக் காலை மக்கள் பெருமளவில் கூடி மணல் அகழ்வை எதிர்த்து போராட்டம் நடத்தியிருந்தனர்.

இதன்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் ஆகியோர் தலையிட்டு மக்களுடன் கலந்துரையாடினர்.

மணற்காடு கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் பாரவூர்தி சங்கம் ஆகியவற்றை ஒன்றாக சந்தித்து இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் எனவும் சுமந்திரன் உறுதியளித்ததை தொடர்ந்து போராட்டம் நிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை 480 கியூப் மணல் அகழ்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கும் நிலையில் இதுவரையில் 800 கியூப் மணல் அகழப்பட்டுள்ளமையினை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

அத்துடன், உடனடியாக மணல் அகழ்வை நிறுத்துமாறு பணித்துள்ளதுடன், இனி மணல் அகழப்பட்டால் கைது செய்யப்படுவீர்கள் எனவும் பொலிஸார் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,8,60)

## கொரோனாவின்...

மென இலங்கையின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க எச்சரித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, இலங்கையில் சிறிய எண்ணிக்கையிலானவர்கள் வைரஸினால் ஏற்படக்கூடிய ஆபத்தை அலட்சியம் செய்கின்றனர்.

அந்தவகையில் இலங்கை இரண்டாவது சுற்று வைரஸ் தாக்கத்தினை தவிர்க்க வேண்டுமென்றால், உலக சுகாதார ஸ்தாபனமும் சுகாதார அமைச்சும் வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டியது மிகவும் அவசியமாகும்.

மேலும் இலங்கை வைரஸ் பரவுதலை ஆரம்பக் கட்டத்திலேயே முறியடித்து விட்டது.

எனினும் எந்த நேரத்திலும் நாட்டில் இரண்டாவது சுற்று ஆபத்து தலைதூக்கலாம் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ம-3)

## ஹெரோயினுடன்...

பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சுற்றிவளைப்பை மேற் கொண்ட பொலிஸார் குறித்த நபரினை கைது செய்துள்ளனர்.

கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் 540 மில்லிகிராம் ஹெரோயினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்.ஓட்டுமடத்தில் 30 வயதுடைய நபரொருவர் யாழ்.பொலிஸ் நிலையப் போதைத் தடுப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-3, 32)

## வடக்கு கிழக்கு...

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 44வது அமர்வில் சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நீடித்த மற்றும் ஆபத்தான ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து ஒரு தசாப்தம் கடந்துவிட்ட போதும், இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகள் பெரிதும் இராணுவ மயமாக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் இலங்கையில் கண்காணிப்பு அதிகரித்திருப்பதாகவும், ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான தமது பயணத்தின் போது, சமூக ஊடகங்கள்போன்ற இணைய வெளி கண்காணிப்பு உள்ளிட்ட கண்காணிப்பு முறைகள் தொடர்பாக, சிவில் சமூகத்திடம் இருந்து கிடைத்த பல்வேறு அறிக்கைகள் குறித்து தீவிர கவலை கொண்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தொலைபேசி அழைப்புகள் கண்காணிக்கப்படுவதாகவும் வீடுகள் அல்லது பணியிடங்களில் கண்காணிப்புகள் இடம் பெறுவதாகவும், புலனாய்வு அமைப்புகளால் ஒளிப்படங்கள் கண்காணிக்கப்படுவதாகவும் ஐ.நா சிறப்பு நிபுணர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு படைகள் மற்றும் புலனாய்வு அமைப்புகளால் போராட்டங்கள் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுவதாகவும், அதன் பின்னர், அத்தகைய போராட்டங்களில் பங்கேற்பவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர், அச்சுறுத்தப்படுகின்றனர் என்றும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, பாதுகாப்புப் படையினர் மற்றும் புலனாய்வுத்துறை அதிகாரிகள் அடிக்கடி தொண்டு நிறுவனங்களுக்குள் நுழைந்து, கேள்விகளை எழுப்பி, அதன் உறுப்பினர்கள் அச்சுறுத்தப்படுவதாகவும், ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் குற்றம் சாட்டியுள்ளார்.

தமது பயணத்தின் போது, சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடனான ஒரு கூட்டத்தில், சிவில் உடையில் இருந்த புலனாய்வுப் பிரிவினர் அதில் பங்கேற்றவர்களைக் கண்காணித்ததாகவும், அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வெளி...

றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

2 ஆயிரம் இலங்கையர்களுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (ம-3,8)

## 58 கிலோ கஞ்சா...

மேற்கொள்ளப்பட்டுள்ள சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 58 கிலோக் கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

கேரள கஞ்சாவின் பெறுமதி சுமார் 60 இலட்சம் என கணிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் 30 மற்றும் 40 வயதுடைய மன்னாரைச் சேர்ந்த இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் கேரளக் கஞ்சா கொண்டு வரப்பட்ட டிங்கி படகொன்றும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சாவும், கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களும் மேலதிக விசாரணைகளுக்காகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-3,18,114)


மெகா பவர்
திகதி 19/06/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0528
W 26 7 17 27 61

மஹஜன சம்பத
திகதி 2020/06/19
சீட்டிழுப்பு இலக்கம் 4159
J 3 3 3 2 8 2

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 19.06.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2453
D 36 40 41 45

தன நிதானய
திகதி - 2020.06.19
சீட்டிழுப்பு இலக்கம் - 282
W 05 46 49 74

கோடிபதி கப்றுக
587 19.06.2020 பச்சை
B 06 16 54 71
சுப்பர் ஜக்பொட் ரூ. 83,229,285/-
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,000,000/-

வெற்றி வாரம் 342
வர்ணம் சிவப்பு
திகதி 19.06.2020
வர்த்தக சந்தையில் தொற்று நோய் தொடர்பான பிரச்சனை காரணமாக 24.04.2020 என அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்கள் இந்த சீட்டிழுப்பில் செல்லுபடியாகும்.
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 12 34 67 விதி எண் 9
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 54, 334, 492

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
வழமைபோல வெளிநாடுகளுக்கு
பொதிகளை எமக்கூடாக
அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240

PERSONAL CLASSES
English Personal Classes
Grade 6 to 11
( ஆங்கில தனிப்பட்ட வகுப்புக்கள்
6 தொடக்கம் 11 வரை)
(3087)
தொடர்புகளுக்கு - 076 217 6366

# தமிழ் மக்களுக்கான உரிமை வழங்கப்பட வேண்டும்-சுரேன்

(ஹட்டன்)

தமிழ் மக்களுக்கு கொடுக்கப்படவேண்டிய சாதாரண உரிமைகள் வழங்கப்படவேண்டும். இதற்கான பாதையை உருவாக்குவதற்காகவே நான் சுதந்திரக்கட்சியில் இருக்கின்றேன் என வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தேர்தல் செயற்பாட்டு அலுவலகம் நேற்று வெள்ளிக்கிழமை ஹட்டனில திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வு முடிவடைந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு."

30 வருடகால போருக்கு பின்னர் அரசியலில் ஏற்பட்டுள்ள ஜனநாயக ரீதியிலான தாக்கம் இன்னும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்படவில்லை என்று தான கூற வேண்டும்.

ஏனெனில் கடந்த 10 ஆண்டுகளாக வடக்கு மாகாண மக்களைப் பிரதி நிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்தில் இருந்த கட்சி மக்களுக்காக என்ன செய்துள்ளது? இந்த கேள்வியை எழுப்பும்போது அந்த கட்சியில் உள்ளவர்களே திருப்தியடைய முடியாத அளவுக்கு தான் நிலைமை உளளது என தெரிவித்தார். (ம-3)

அறைகள் வாடகைக்கு
யாழ்.மாநகர சபை எல்லைக்குள்
அலுவலர்கள், மாணவர்களுக்கான
அறைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- (3013)
077 224 2787

வேலைவாய்ப்பு
நெல்லியடி 750 வீதியில் அமைந்துள்ள ஒரு தொழிற்சாலைக்கு வெல்டிங் வேலை தெரிந்தவர்கள் இருவர் தேவை. உடனடியாக இந்தத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். வேலைக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும்.
தொலைபேசி இலக்கம்:- 077 711 8960

RATNAM HOTEL
◆ சமையல் ஆள்
◆ சமையல் உதவியாளர்
◆ Juice, Tea மாஸ்டர்
◆ ஆப்பம் போடுபவர்
◆ றைஸ் மாஸ்டர்
◆ பரோட்டா மாஸ்டர்
(3060)
Contact - 077 808 5656

தேவை
கொழும்பில் பீ.வீ.சி குழாய்கள்
மற்றும் உதிரிப்பாகங்கள் உற்பத்தி
செய்யும் நிறுவனத்திற்கு
இயந்திர உதவியாளர்கள்
( Machine Helpers ) தேவை.
நல்ல சம்பளத்துடன் உணவு,
தங்குமிட வசதியும் செய்து தரப்படும்.
[ நேர்முகப் பரீட்சை யாழில் நடைபெறும். ]
(3056)
தொடர்புகளுக்கு - 077 132 1728

DISABLE PERSON SCOTTER FOR SALE

(3051)
Tel : 077 233 4197

கனடாவில் உயர்கல்வி
குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி
எமது வீசா ஆலோசனை வாயிலாக
கனடா சென்ற மாணவர்களினை நேரில்
வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும்
IELTS, LIFESKILLS A1 மற்றும் GERMAN A1, DUTCH
வகுப்புக்கள் 29.06.2020 அன்று காலை 10 மணிக்கு ஆரம்பம்.
இலவச பதிவுகளுக்கு : 0779265447 (10am - 5pm)
புதிய மாணவர்களுக்கு 25 வீதம் கட்டண கழிவு
யாழ் மற்றும் சாவகச்சேரி நகர்களில்
கடந்த 10 வருடங்களாக மிகநேர்த்தியாக
சேவையாற்றிவரும் ஒரேயொரு முன்னணி நிறுவனம்
நேரில்வந்து சந்தித்து இலவச
ஆலோசனைகளை அறிந்து
கொண்டு பயன்பெற...
WORLD EDUCATION CONSULTANCY
அலுவலகம்: புதிய உயர் கல்லூரி வளாகம்
ஆரியகுளம் யாழ்ப்பாணம்
கிளை: சங்கத்தானை சாவகச்சேரி.
0779265447 / 0217200989

விற்பனைக்கு
நல்ல இன ஆட்டுக் குட்டிகள்
விற்பனைக்கு உண்டு.
(3066)
தொடர்புகளுக்கு - 077 663 1742

வாடகைக்கு
யாழ். திருநெல்வேலிப் பரமேஸ்வராச் சந்தியில்
பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட தனி வழிப்
பாதையுடன் முதலாவது மாடி
( 1100 சதுரஅடி பரப்பளவு )
இரண்டு அறைகளும் 2 குழியலறைகளும்
கொண்ட கட்டடம் வாடகைக்கு உண்டு.
( சேவை நிலையங்களுக்கு ஏற்றது.)
(C 9733)
தொடர்புகளுக்கு - 077 953 0496

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
இம்மாதம் 20ம் திகதி முதல்
இந்தியன்
செலக்ஷனின்
ஆடி மாத விஷேட தள்ளுபடி...

திருமணப் பட்டுச் சாறிகள்,
கொட்டுன் சாறிகள்,
வைபவங்களுக்கான சாறிகள்,
கவுண் வகைகள்,
சல்வார்கள், சல்வார் துணிகள்,
டொப் வகைகள்
மற்றும் ஏராளமான
ஆடைத்தெரிவுகளை விஷேட
விலைக் கழிவில்
பெற்றுக் கொள்ளலாம்.
(C 9729)
20.06.2020 தொடக்கம் 05.07.2020 வரை
இடம் - வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
குறிப்பு :- ஆடைகளைக் கொள்வனவு செய்ய வரும்
வாடிக்கையாளர்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றவும்...

TOTAL SOLUTION FOR CLEANING
தன்னிகரற்ற யாழ் உற்பத்தி
NEW TECHNOLOGY NEW FORMULA
HI CLEAN TM
OUR ENDEAVOR IS RELATED TO SOCIAL SERVICES
பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள்
கோவில்கள், ஆலயங்கள், வியாபார நிலையங்கள்
அனைவருக்கும்
உங்களுக்கு தேவையான அனைத்துவிதமான
தொற்றுநீக்கிகள், கிருமிநாசினிகள், தெளிகருவிகள், துப்பரவாக்கிகள்,
மிருதுவாக்கிகள் மற்றும் அதற்கான உபகரணங்கள்
குறைந்த விலையில் சில்லறையாகவும் மொத்தமாகவும்
பெற்றுக்கொள்ளலாம்
பாவனைமுறை பற்றி முழுமையான அறிவுறுத்தல் வழங்கப்படும்
Hand wash | Sanitizer | Sanitizer Spray | Hypochlorite | Veetol Disinfection | Chlorine
Liquid Chlorine | Fino Clean | Tile Mopp | Lizen | Calcium Cleaner | Anti Mosquito Spray | Toilet Cleaner
Air Freshener | Glass Cleaner | Marble Cleaner | IPA Alcohol

NFLASH SUPER DETERGENT
Reg : NAL/DS/1511
Kondavil East, Kondavil, Jaffna
(+94) 21 221 4520 / (+94) 77 816 2637 nflashdetergent@gmail.com
Showroom : 607A, K.K.S Road,(near the manohara theatre) Jaffna.
SALES : Jaffna: Neethan. 0778444951 / Nelliyady : Gananathan. 0774130648
Kilinochchi, Mullaitevu, Vavuniya, Mannar: Ruban. 0779737809

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.